விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 18-ம் உ | சனிக்கிழமை | (31 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 03 | ஓசை 41

## பத்தாயிரம் பேருக்கு அடுத்த வாரம் தேசிய அடையாள அட்டை!

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைக்கு, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களில் சுமார் பத்தாயிரம் பேருக்கு இம்மாதம் முற்பகுதியில் அடையாள அட்டைகள் கிடைக்கவிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

இந்திய இராணுவம், தமிழ்த் தேசிய இராணுவத்தில் சேர்ந்தவர்களுக்குத் தேசிய அடையாள அட்டைகள் அனுப்ப வேண்டும் என்று விடுத்த கோரிக்கைகளினால் இந்த விண்ணப்பங்களின் அடையாள அட்டைகள் அனுப்பப்படாமல்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## வாகன அனுமதிப்பத்திரங்கள் பெறுவோர்தொகை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு வாகன அனுமதிப்பத்திரங்கள் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளதாக செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்தவருடம் 260 பேர் வாகன அனுமதிப்பத்திரங்கள் பெற்றனர். இவ்வருடம் இதுவரை 240 பேர் வாகன அனுமதிப்பத்திரங்கள் பெற்றனர். கடந்தவருடம் 118 மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்பட்டன. இவ்வருடம் இதுவரை 296 மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். (37)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரிய விபரங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக ஆரம்ப கல்வி ஆசிரியர்கள் 241 பேர் உட்பட 439 பேர் நியமனம் பெற்றுள்ளதாக பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் தெரிவித்தார்.

மேற்படி ஆசிரியர் நியமனம் பாடரீதியான எண்ணிக்கை வருமாறு,

இந்துசமயம் 05, கணிதம் 16, விவசாயம் 03, விஞ்ஞானம் 24, றோ. கத்தோலிக்கம் 12, சங்கீதம் 12, தமிழ் 10, சமூகவியல் 12, ஆங்கிலம் 39, சித்திரம் 03, நடனம் 14, றோ. கத்தோலிக்கம் (அல்ல) 07, உடற்கல்வி 10, சித்திரம் 15, மனையியல் 02, மரவேலை 01, வர்த்தகம் 5, சிங்களம் 10 என்ற ரீதியில் எண்ணிக்கை அடங்கும். 37.

### அன்னை பூபதி நினைவாக

## பயிலுநர் ஆசிரியர்கள் மாணவர்கள் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் அன்னை பூபதி நினைவாக கடந்த திங்கட்கிழமை ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் கலாசாலை மண்டபமொன்றுக்கு "அன்னை பூபதி" மண்டபம் என பெயர் சூட்டப்பட்டது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஒரு நாள் அடையாள

(6ஆம் பக்கம் பார்க்க)

### மனிதாபிமான அடிப்படையில்

# கைதான மீனவர் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதோடு இப்பகுதி மீனவர்களின் வலைகளை அறுத்துச்செல்வதிலும் ஈடுபட்ட நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் இரண்டு நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் இனியும் எமது கடற்பரப்பில் பிரவேசிக்கக்கூடாது எனவும், வலைக்களவுகளில் ஈடுபடக்கூடாது என்றும் எச்சரித்து அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துமீறி வடபகுதிக் கடற்பிரதேசத்துள் நுழைந்து மீன்பிடித்ததுடன், வலைகளையும் அறுத்த ஐம்பதுக்கு மேற்பட்ட ரோலர் படகுகளையும் மீனவர்களையும் கரைக்கு வடபகுதி மீனவப் படகுகளே கொண்டுவந்து சேர்த்தன.

இதன்பின் இம் மீனவர்களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் விடுதலைப் புலிகள் பொறுப்பேற்றனர். வடபகுதிக் கடற்பரப்பில் எமது மீனவர்களே ரோலர்மீன் பிடிப்பதை விடுதலைப் புலிகள் ஏற்கனவே தடுத்துள்ளதையும் நினைவூட்டினர்.

எமது கடற்பிரதேசத்தில் கூட இந்தியா தலையிடுவதை நாங்கள் விரும்பவில்லை என்றும் விடுதலைப் புலிகள் தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் நினைவாக கிளிநொச்சியில் எழுச்சி விழா

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை கலாசார அவை அன்னை பூபதியின் நினைவாக ஏப்ரல் 19 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் எழுச்சி விழா ஒன்றை நடாத்த உள்ளது.

இவ்விழாவில் தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான மாட்டு வண்டிச் சவாரி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், தாச்சி, மல்யுத்தம், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை மற்றும் பலவும் இடம்பெறவுள்ளன.

இது தவிர, தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கக்கூடியதாக நடனம், நாடகம், இசை- பேச்சு, கவிதை, பட்டிமன்றம் ஆகியவைகளும் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நினைவுத் தூபி திறப்புவிழா

இன்று புதுக்குடியிருப்புச் சந்தியில் லெப். துர்க்காவின் ஞாபகார்த்த நினைவுத் தூபி ஒன்று பிற்பகல் நான்கு மணி அளவில் திறந்து வைக்கப்பட உள்ளது. இத்தூபிவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவினால் திறந்து வைக்கப் படவுள்ளது. மேலும் மகளிர் முன்னணி

### யாழ்: நகரில்

## பிரதேசப் பொறுப்பாளர்களுடன் பிரபாகரன் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்று யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இன்று தமிழ் பிரதேசத்தில் நிலவும் சூழ்நிலைபற்றியும், வேறு அம்சங்கள் பற்றியும், விடுதலைப்புலிகள் முன்னணித் தலைவருடனும்,

(6ஆம் பக்கம் பார்க்க)



தலைவர் வே. பிரபாகரன் நேற்று முன்தினம் யாழ். நகருக்கு வந்து சேர்ந்த பின் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பானுவுடன் யாழ் மாவட்ட நிலைமைகள் குறித்து ஆலோசனை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம் இது. நேற்று முன்தினம் இரவும் நேற்றும் விடுதலைப் புலிகள் பொறுப்பாளர்கள், மக்கள் முன்னணி இணைப்பாளர்களைச் சந்தித்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார் தலைவர் பிரபாகரன்.

## ஒதுக்கப்பட்ட தொகை பின்னர் செலவிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்காக பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட இருநூற்றைம்பதுஇலட்சம் ரூபாயில் இருபத்தைந்து லட்சம் மட்டுமே செலவிடப்பட்டது என்ற செய்தியில் எம். பி மாரின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் மந்திரிசபையில்

பயிலுநர் ஆசிரியருக்கு

## புத்தளம், நுவரெலியாவில்

வித்தார்.

மேற்படி ஆசிரியர் நியமனம் பாடரீதியான எண்ணிக்கை வருமாறு,

இந்துசமயம் 05, கணிதம் இயல் 02, மரவேலை 01, வர்த்தகம் 5, சிங்களம் 10 என்ற ரீதியில் எண்ணிக்கை அடங்கும். 37.

அன்னை பூபதி நினைவாக

# பயிலுநர் ஆசிரியர்கள் மாணவர்கள் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் அன்னை பூபதி நினைவாக கடந்த திங்கட்கிழமை ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் கலாசாலை மண்டபமொன்றுக்கு ''அன்னை பூபதி'' மண்டபம் என பெயர் சூட்டப்பட்டது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஒரு நாள் அடையாள

(6ஆம் பக்கம் பார்க்க)

...இடம் மீனவர்கள் இரண்டு நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் இனியும் எமது கடற்பரப்பில் பிரவேசிக்கக் கூடாது எனவும், வலைக் களவுகளில் ஈடுபடக்கூடாது என்றும் எச்சரித்து அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துமீறி வடபகுதிக் கடற்பிரதேசத்துள் நுழைந்து மீன்பிடித்ததுடன், வலைகளையும் அறுத்த ஐம்பதுக்கு மேற்பட்ட ரோலர் படகுகளையும் மீனவர்களையும் கரைக்கு வடபகுதி மீனவப் படகுகளே கொண்டுவந்து சேர்த்தன.

இதன்பின் இம் மீனவர்களின் பாதுகாப்பையும் பரா

# கிளிநொச்சியில் எழுச்சி விழா

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை கலாசார அவை அன்னை பூபதியின் நினைவாக ஏப்ரல் 19 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் எழுச்சி விழா ஒன்றை நடாத்த உள்ளது.

இவ்விழாவில் தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான மாட்டு வண்டிச் சவாரி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், தாச்சி, மல்யுத்தம், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை மற்றும் பலவும் இடம்பெறவுள்ளன.

இது தவிர, தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கக் கூடியதாக நடனம், நாடகம், இசை- பேச்சு, கவிதை, பட்டிமன்றம் ஆகியவைகளும் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நினைவுத் தூபி திறப்புவிழா

இன்று புதுக்குடியிருப்புச் சந்தியில் லெப். துர்க்காவின் ஞாபகார்த்த நினைவுத் தூபி ஒன்று பிற்பகல் நான்கு மணி அளவில் திறந்து வைக்கப்பட உள்ளது. இத்தூபிவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் சோ. மகேந்திரராசாவினால் திறந்து வைக்கப் படவுள்ளது. மேலும் மகளிர் முன்னணி உறுப்பினர்களும் மற்றும் விடுதலை புலிகள் பொதுச்செயலாளர் யோகரெத்தினம் யோகி, கவிஞர் காசி ஆனந்தன் என்போரும் பங்குபற்றவுள்ளனர்.



தலைவர் வே. பிரபாகரன் நேற்று முன்தினம் யாழ். நகருக்கு வந்து சேர்ந்த பின் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பானுவுடன் யாழ் மாவட்ட நிலைமைகள் குறித்து ஆலோசனை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம் இது. நேற்று முன்தினம் இரவும் நேற்றும் விடுதலைப் புலிகள் பொறுப்பாளர்கள், மக்கள் முன்னணி இணைப்பாளர்களைச் சந்தித்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார் தலைவர் பிரபாகரன்.

# ஒதுக்கப்பட்ட தொகை பின்னர் செலவிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்காக பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட இருநூற்றைம்பது இலட்சம் ரூபாயில் இருபத்தைந்து லட்சம் மட்டுமே செலவிடப்பட்டது என்ற செய்தியில் எம். பி மாரின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளம், நுவரேலியாவில் தமிழிலும் அரச கருமங்கள்

(கொழும்பு)

புத்தளம், நுவரெலியா மாவட்ட அரசாங்க அலுவலகங்களிலும், அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் தமிழிலும் கருமங்கள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமாவின் மந்திரிசபையில் மீண்டும் டி. பி. பிரதமர் காமினி இல்லை!

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் புதிய அமைச்சரவை நேற்றுக் காலை பதவியேற்றது. முதல் ஒரு வருடம் பிரதம மந்திரி பதவிவகித்த டி. பி. விஜயதுங்காவே மீண்டும் பிரதமமந்திரியாகப் பதவியேற்றார். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வாரிசு என ஒரு காலத்தில் கருதப்பட்ட முன்னாள் பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் காமினி திஸநாயக்கா புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லை. முன்னாள் உணவு அமைச்சர் அத்துலத்முதலி கல்வி உயர் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

புதிய இருபத்திஐந்து அமைச்சர்களும் நேற்றுக் காலை ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். ஜனாதிபதி மாளிகையில் இவ் வைபவம் நடைபெற்றது.

புதிய அமைச்சர்களும் அவர்களது அமைச்சுக்களின் பெயர்களும் வருமாறு:

பௌத்த சாசனம், கொள்கைத் திட்டமிடல், பாதுகாப்பு ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ.

பிரதம மந்திரி, நிதி- டீ.பி. விஜயதுங்க.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள்-விஜயபால மெண்டிஸ்

நீதி- ஏ சி.எஸ் ஹமீட்

சுற்றாடல் பாராளுமன்ற அலுவல்கள்- வின்சன்ற் பெரேரா.

கல்வி, உயர்கல்வி- லலித் அத்துலத் முதலி.

மாகாண சபைகள், பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள்- பெஸ்டஸ் பெரேரா.

சுற்றுலா; கிராமியத் தொழில் அபிவிருத்தி- எஸ். தொண்டமான்.

கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்பவியல்- ரணில் விக்கிரமசிங்க.

காணி நீர்ப்பாசன மகாவலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ்கரலிங்கம் நிதி. திட்டமிடல் செயலாளராக தெரிவு

புதிய அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு:-

பௌத்தசாசனம் - டீ. எம். பீ. பீ. தஸநாயக்கா, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல், நிதி-ஆர். பாஸ்கரலிங்கம், பாதுகாப்பு அமைச்சு - ஜெனரல் சிறில் ரணதுங்கா, வெளிவிவகார அமைச்சு - வீ. பீ. திலகரட்னா, காணிவிவசாய நீர்ப்பாசனம் மகாவலி - ஏ. ஏ. விஜதுங்க விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி டிக்சற் நிலவீர, உணவு கூட்டுறவு - பீ. பீ ஜீ. என் லீலாரட்ன, கடற்றொழில் நீரியல் வளங்கல்-என். பீ.கே.பெராகொட பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல் மாகாணசபைகள் - கலாநிதி குணசிங்க, வர்த்தகம் - ஹர்ஸா விக்ரமசிங்க, துறைமுகம், கப்பற்றுறை - டீ. கே. தஸநாயக்கா, பெரும் தோட்ட தொழில்துறை-ஆர். எச். ஜயரட்ன, கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப - ஏ. எஸ். ஜெயவர்த்தனா, மின் சக்தி எரிபொருள் - ஏ. மொக

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்திற்கு வனவள அதிகாரி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் வனவளத் திணைக்கள அலுவலகத்திற்கு பிரதேச வனவள அதிகாரி எவரும் நியமிக்கப்படவில்லை. தற்போது இவ்வலுவலகம் ஓரேயொரு அலுவலருடன் இயங்கி வருகிறது.

அதேபோல கடந்த காலங்களில் ஐந்து எழுது வினைஞர்களைக் கொண்ட இவ்வலுவலகத்தில் எவரும் அப்பதவியில் தற்போது இல்லை என்று அங்கிருக்கும் அலுவலர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கூறுகையில் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமாக ஒரு பிரதேச வனவள அதிகாரியே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தந்து ஆறு மாதங்கள் ஆகிறது என்றார்.

(லோ)

## பயிலுநர் ஆசிரியருக்கு சுற்றாடலில் நியமனம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஆசிரியர் பயிலுநர்களாக நியமனம் பெற்றவர்களில் சிலருக்கு நிரந்தர வதிவிட சுற்றாடல் பாடசாலைகளில் நியமனம் பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

சுற்றாடல் பாடசாலைகளில் வெற்றிடம் இருக்கின்ற போதிலும் நியமனம் வழங்கப்படவில்லையென பாடசாலைஅபிவிருத்திச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் ஆசிரியர்கள் 5 - 7 மைல் தூரம் வரையில் பிரயாணம் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (37)

## உறுப்புரிமை பறிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

விவசாயக் காப்புறுதிப்பணம் செலுத்தும் விவசாயிகள் காலாகாலத்தில் 2-ஆம் தவணைப் பணம் கட்டத் தவறுவோர் தமது உறுப்புரிமையை இளக்க நேரிடும் இதனைக் கருத்தில் கொண்டு விரைவில் தமது கட்டுப்பணங்களைக் கட்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## அரிசி விலை வீழ்ச்சி

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு அரிசி உட்பட சில உணவுப் பொருட்களின் விலை புறக்கோட்டைச் சந்தையில் குறைந்துள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து செத்தல் மிளகாய் அரிசி என்பன வருவதில் போக்குவரத்துப் பிரச்சினைகள் தற்போது இல்லாததாலேயே விலை குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# அதிகார துஷ்பிரயோகம்; சுரண்டலுக்கு இடமில்லை!

-உயர் அதிகாரிகள் மத்தியில் டொமினிக்

(யாழ்ப்பாணம்)

''நெருக்கடிகள் கஷ்டங்கள் நீங்கி இன்று சுமூக நிலை ஏற்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மக்களுக்குச்சேவைசெய்ய வந்துள்ள அரசாங்க அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் அதிகார துஷ்பிரயோகம், சுரண்டல், சோம்பல், கெடுபிடிகளுக்கு இடம் வைக்காமல் செயலாற்றவேண்டியது'' அவசியம்.

இவ்வாறு யாழ் மாவட்ட சகல அரசாங்க தலைமை நிர்வாகிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் கூறினார்.

அரசாங்க நிர்வாக விஷயத்தில் நாங்கள் தலையிடமாட்டோம் இதேவேளை அரசாங்க அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்து எங்களுக்குச் சிக்கல்தராமலிருப்பார்களென்றும் எதிர்பார்க்கிறோம் என்றும் கூறிய திரு. டொமினிக் மக்களைச் சுரண்டுவதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# திறந்தவெளிச் சிறைச்சாலை திருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலை திருத்தி அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சேதமடைந்து காணப்பட்ட இச் சிறைச்சாலையை யாழ். செயலகத்திலிருந்து அண்மையில் விஜயம் செய்த அதிகாரிகள் மதிப்பீடுகள் செய்துள்ளனர்.

முன்பு இச்சிறைச்சாலையில் தோட்ட வேலைகளும் கால்நடை வளர்ப்பு என்பன நடைபெற்று வந்தன குறிப்பிடத்தக்கது. மீண்டும் இச் சிறைச்சாலை நவீன வசதிகளுடன் அமைக்கப்படுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளது.

(லோ)

# மோசடியைத் தவிர்க்க வங்கிக்கு காசோலையை அனுப்புக

(யாழ்ப்பாணம்)

காசோலை மோசடி நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு வங்கிகள் புதிய திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளன.

வெளிநாட்டிலுள்ளோர் தங்கள் உறவினர்களுக்கனுப்பும் காசோலைகள் வீடுவரும் முன்னர் ஏமாற்றப்படுவது தெரிந்ததே. இதைத் தடுப்பதற்கு பணம் அனுப்புபவர் நேரடியாக வங்கிக்கு அனுப்பலாம். வங்கி குறிப்பிட்ட நபருடன் நேரடியாக தொடர்பு கொண்டு உரிய பணத்தை வழங்கும். இத்திட்டம் சிறந்ததாக இருப்பதால், இந்த முறையை மேற்கொள்ளும்படி வாடிக்கையாளர்களை வங்கி வேண்டுகின்றது. (ஜெ)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
M.G.M. 777, K.K S. ROAD AFFNA. (B-67)

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநாதன். B.362

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள்பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற்சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்.
RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.
(B 414)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (B-189)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவு பதனிடும் நிறுவனத்திற்கு இரசாயனப் பகுப்பாளர் (Chemist) ஒருவர் தேவைப்படுகின்றார் தகுதியானோர் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 004
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி C/o ஈழநாதம்
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 429


தொழில் நுட்பக்

# எமது பாரம்பரியக் கலையை நாம் வளர்க்கமுன்வரவேண்டும்

(மட்டக்களப்பு)

பொப் இசை, பிறேக், டிஸ்கோ ஆகிய மேலைத்தேய இசை, நடனம் எமது கலை, கலாசாரத்திற்கு அழிவை ஏற்படுத்துகின்றது. இதனை விரட்டியடிப்பது சகலரினதும் கடமையாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இசை, நடன ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்த காலாண்டு இசை, நடன விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் திரு. வி. த. குமாரசாமி குறிப்பிட்டார்.

ஆனைப்பந்தி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சுவாமி ராஜேஸ்வரானந்தஜீ மங்கள விளக்கேற்றி ஆரம்பித் வைத்தார்.

திரு. குமாரசாமி மேலும் பேசுகையில்;

எமது சமுதாயத்தில் சிலர் மேலைத்தேயஇசையில் மூழ்கி வாழ்ந்துகொண்டுஎமதுபாரம்பரிய கீழைத்தேய கலையை அழிக்க முயலுகிறார்கள். இதற்கு நாம் இடமளிக்கக்கூடாது

கடந்தகால சூழ்நிலை காரணமாக எமது பாரம்பரியக் கலையை வளர்க்க முடியாத நிலை இருந்தது. தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக புத்துயிர் பெறத் தொடங்கி விட்டது என்றார். (37)

# அன்னை பூபதி நினைவாக மட்டக்களப்பில் சர்வோதய நிகழ்ச்சிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சர்வோதயம் அன்னை பூபதி நினைவு தொடர்பாக எதிர்வரும் 16ஆம் 17ஆம் 18ஆம் திகதிகளில் பல்வேறுவைபவங்களை ஏற்பாடு செய்துள்ளது.

16ஆம் திகதி வெபர் மைதானத்தில் மாவட்ட ரீதியில் அன்னை பூபதி நினைவு கேடயகரப்பந்தாட்டப் போட்டி.

17ஆம் திகதி வாகரை வைத்தியசாலையில் சிரமதானம், திருத்தம்.

வெருகல் பஸ்தரிப்பு நிலையம் திறந்து வைத்தல், வாகரையில் இலவச கல்வி நிலையம் அங்குரார்ப்பணம் செய்தல். மற்றும் காத்தான்குடி அனாதை விடுதி, மாந்தீவு தொழுநோயாளர் ஆஸ்பத்திரி சின்ன ஊறணி, மங்கயற்கரசி அனாதைவிடுதி, களுதாவளை திருநாவுக்கரசு அனாதை விடுதி ஆகியவற்றில் அன்ன தானம்.

18ஆம் திகதி மட்டு நகர் சின்ன ஆஸ்பத்திரி சந்தியில் நினைவு தூபி திரை நீக்கம் செய்தல், சர்வோதய தொண்டர்கள் நகர வீதியில் மௌன அஞ்சலி ஊர்வலம் நடத்துவார்கள்.

பூபதியின் தியாகத்தை சித்தரிக்கும் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

அன்றைய தினம் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தலங்களில் விசேட பிரார்த்தனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வைபவங்களில் விடுதலைப் புலிகள் [illegible] முன்னணி பிரதி தலைவர் எஸ். கரிகாலன் கலந்து கொள்ளார். (37)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அதிக இடம்

1989 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையில் சாவகச்சேரி மகளிர் மாகவித்தியாலயம் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது

கடந்த ஆகஸ்ட் மாதம் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு 50 மாணவிகள் தோற்றினர். இவர்களில் 44. மாணவிகளும் பல்கலைக் கழகத்திற்குப் புகுவதற்கான தகமையைப் பெற்றுள்ளனர்

மீதி 6 மாணவியர்களும் 3 பாடங்களிலும்100 விகிதமான சித்திகளைப் பெற்றுள்ளனர். (35)

## வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா

(கல்லாறு)

வெல்லாவெளியில் இயங்கி வரும் ஒரேயொரு பாடசாலையான கலைமகள் வித்தியாலயத்தின் மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக, கடந்த ஆண்டின் இறுதித் தேர்வில் திறமை காட்டிய மாணவர்களுக்கு வெல்லாவெளி கிராம அபிவிருத்திச் சபை எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதி பரிசளிப்பு விழா ஒன்றைநடாத்திக் கௌரவிக்க இருக்கிறது.

இப் பரிசளிப்பு விழாவிற்கு களுவாஞ்சிக் குடா கோட்ட கல்வி அதிகாரி திரு. முத்துலிங்கமும் தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கமும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ள இருக்கின்றனர். சிறப்பு விருந்தினராக வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சாமித்தம்பி கலந்து கொள்வார்.

இவ் விழாவில் கிராம அபிருத்திச் சபையினரல் வெல்லாவெளி கிராம அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட ஐம்பது இரும்புக் கதிரைகள்வாடகைக்கு விடப்படும் வைபவமும் நடைபெற இருக்கிறது.

அத்துடன் வெல்லாவெளி கிராம அபிவிருத்திச் சபையினால் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு ஒலிபெருக்கிச் சாதனங்களை அன்பளிப்புச் செய்யும் வைபவமும் நடைபெறும்.


Five Star French Polish

★ ★
★
★ ★

வீட்டுத் தளபாடங்களை நீங்கள் அழகிய முறையில் வைத்திருக்க வேண்டுமா? அதற்கு நீங்கள் கீழ்க்கண்ட பொலிஷை வாங்கிப் பாவியுங்கள்.

FIVE STAR FRENCH POLISH

ஏக விநியோகஸ்தர்கள்

அம்பாள் பெயின்ற் ஹவுஸ்

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(B/486)

மலர்க புத்தாண்டே!

இரத்தினம் மில்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

மிளகாய், கோப்பி சிறந்த முறையில் அரைத்துக் கொடுக்கப்படும்.

(B.489)

புதுவருட வா த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு, மீண்டும் எமது ஸ்தாபனம் அதே இடத்தில் இயங்கி வருகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

★ ★ ★

அழகிய சேட்டிங், சூட்டிங், சேலை வகைகளை

மக்கள் வங்கி

அடகு நகைகள் மீளளித்தல்

கிளிநொச்சி மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. பரந்தன் கிளை | (1989. 09 27 வரை பணம் | 1990. 04. 02 | திங்கள் |


## யாழ் நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
10·30 2.30 4.45 700
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10. 30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
**ஹரன் யாழ்.**
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

**லிடோ (யாழ்)**
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்தகாட்சிகள்
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை
போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

## பிறிதொரு தினத்தில் நேர்முகப் பரீட்சை

Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்,புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி,நல்லூர். (B-189)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவு பதனிடும் நிறுவனத்திற்கு இரசாயனப் பகுப்பாளர் (Chemist) ஒருவர் தேவைப்படுகின்றார் தகுதியானோர் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 004

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி C/o ஈழநாதம்
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 429

## தொழில் நுட்பக் கல்லூரிக்கு பஸ்சேவை

யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு காலைநேர பஸ் சேவை விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இவ் பஸ் சேவை அத்தியாவசியமானது என தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ராஜேந்திரா அவர்கள் வட இலங்கை போக்குவரத்து சபையிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்கவே ஏற்பாடாகி உள்ளது.

இதேபோல் மாலை நேரத்திலும் ஒரு பஸ் சேவை விரைவில் ஒழுங்கு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ே)

அரசாங்க அதிபர் திரு.இரா. நாகலிங்கமும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ள சாதனங்களை அன்பளிப்புச் செய்யும் வைபவமும் நடைபெறும்.

---

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு, மீண்டும் எமது ஸ்தாபனம் அதே இடத்தில் இயங்கி வருகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

★ ★ ★

அழகிய சேட்டிங், சூட்டிங், சேலை வகைகளை நீங்கள் நம்பிக்கையுடன் பெற்றிட

★
★

# றஞ்சனாஸ் ரெக்ஸ்,

இல:- 4, மத்திய சந்தை,
யாழ்ப்பாணம்.

(B. 485)

---

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(B/486)

(B.489)

---

மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

## கிளிநொச்சி மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை | (1989. 09 27 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 02<br>1990. 04. 03 | திங்கள்<br>செவ்வாய் |
| 2. | கிளிநொச்சிக் கிளை | (1989. 06. 23 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 04 | புதன் |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 1. 00 மணி வரை அடகு நகைகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி.
பிராந்தியத் தலைமையகம், யாழ்ப்பாணம்.
(B/458)

---

125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

## பிறிதொரு தினத்தில் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

கல்விச் சேவைகள் குழு பாடசாலைகளில் அதிபர்களை நியமிப்பதற்கு தற்பொழுது நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி வருகின்றது.

கல்விப் பொது தராதரப் பரீட்சை நிலையங்களில நேர்முகப் பரீட்சைகளில் தோற்றும் பலர் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றுவதால் இவர்களுக்கென பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைகளை தனியாக நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

பயனுறு பல்வகைச் சேவைகளின் முன்னோடி

# கட்டைவேலி - நெல்லியடி ப.நோ. கூ. சங்கம்

அதன்

தொழிற்பரப்பு:- நெல்லியடி பட்டினசபையும், கட்டைவேலி கிராம சபையும்.
விற்பனை நிலையம்:- 56; ஊழியர் கோப்பு:- 169.
உறுப்புரிமை:- ரூபா. 10/- இலும் கூடிய பங்குடைமை - 9908
ரூபா. 10/- இலும் குறைந்த பங்குடைமை - 5092
பங்கு மூலதனம்:- 204749 50 வியாபார இருப்பு:- 8460244·00

நல்லனவற்றை நயமான விலையில் வழங்கும் பரந்து விரிந்த நுகர்ச்சிச் சேவை
தரமும் சுவையும் நிறைந்தவற்றைக் குறைந்த விலையில் சுவைக்க பாண்சாலையும், சிற்றுண்டிச்சாலைகளும்
கலை, கலாசார வளர்ச்சிக்கு கலாசார கூட்டுறவுப் பெருமன்றம், புத்தக வெளியீடுகள், உயர்கல்வி நிதி உதவிகள், மகளிர் குழு,
பாலர் பாடசாலைகள், தேசிய பயிலுனர் சேவைகள்.

அனைவரின் நலம் பேண இன்னும் பல.

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி.** (B/445)

# நான்கு அரச அதிகாரிகள், இரண்டு தரகர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டு

## ராஜீவ் காலத்து ஏ 320 ஏயர் பஸ் விவகாரம்

(டெல்லி)

இந்தியாவில், ஏயர் பஸ் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக கிரிமினல்வழக்கு ஒன்றை இந்தியாவின் மத்திய புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ) பதிவு செய்திருக்கிறது.

ஏயர் பஸ் தொழிற்சாலை நிறுவனத்திடம் இருந்து இந்திய ஏயர் லைசன்ஸ் நிறுவனத்தார் ஏ320 ரக ஏயர் பஸ் விமானங்களை வாங்குவதற்காக 2500 கோடி ரூபாய் பெறுமதியுடைய விற்பனை பேரத்தில் நடந்தாகக் கூறப்படும் லஞ்ச ஊழல் தொடர்பாகவே இவ் வழக்கு வியாழக் கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டில்நான்குஅரசாங்க ஊழியர்களும் இரண்டு விமான பேரத்தில் ஏஜென்டுகளாகசெயல்பட்டவர்களும் குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இதில் சிவில் விமானப் போக்குவரத்து இலாக்ககவின் அப்போதைய செயலாளரான எஸ். எஸ். சித்து. இந்தியன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தின் அப்போதைய நிர்வாக அதிகாரி கப்டன் ஜே சித்தா, நிர்வாகியின் அப்போதைய பொருளாதார ஆலோசகர் ஆர். பிரசாத், இந்தியன் ஏயர் லைன்ஸ் விமானத்தின் துணை நிர்வாகி வி. கே. பசீம் ஆகியோரே இந்த ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் மீது மோசடி, லஞ்ச ஊழல் முறை கேடு போன்ற குற்றங்கள் சாட்டப்பட்டது.

விசேட நீதிபதி லோகேஷ் பிரதாப் நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான பேரம் பற்றிய என்.ஐ ஆர். அறிக்கை மேலும் தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

இந்த ஏயர் பஸ பேரத்தினால் இந்தியன் ஏயர்லைன்ஸ் நிறுவனம் குறைந்த பட்சம் 500 கோடி ரூபாவிற்கு கூடுதலாக இழக்கு நேரிடடதாகவும் கூறுகிறது.

ஏயர் பஸ் விநியோகிக்க ஒப்புக்கொண்ட கொம்பனி தாம் கொடும்பதாகக் கூறிய காலக் கெடுவிற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே ஏ 320 ரக விமானங்களை அனுப்பி வைக்கும் பணி தொடங்கிய காரணத்தினால் 1985 - 89 வரையயான காலகட்டத்தின் போது நேரிட்ட சட்டுப்பாட்டை சமாளிப்பதற்காகம் இந்தியன் ஏயர் லைன்ஸ் நிறுவனம் கணிசமான அளவில் செலவு செய்ய வேண்டி இருந்ததாகவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது:

பிரான்சில் உள்ள இந்த ஏயர் பஸ் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட அரச ஊழியர்களுக்கு கமிசன் தொகையும், பெருமளவிற்கான லஞ்சமும் கொடுத்திருப்பதாக சொல்லப்படுவதாய் சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருப்பதாயும் என். ஐ. ஆர். அறிக்கை கூறுகிறது.

அத்துடன்இந்த புலன்விசாரணையில் நடவடிக்கைகளில் இண்டர் போல் சர்வதேச நிறுவனத்தின் உதவியையும் சி. பி. ஐ. பெறுவார்கள் எனவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது.

## அணுவாயுதத்தை இயக்கும் கருவியை கடத்த முயன்றோர் நீதி மன்றத்தில்

(லண்டன்)

ஈராக்கிற்கு, அணுவாயுதத்தை இயக்கும் கருவியைக் கடத்த முயன்றதாக கைது செய்யப்பட்ட மூவர் வியாழன் அன்று லண்டன் நீதி மன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டார்கள்.

சட்ட விதிகளை மீறி சில ஏவுகணை இயந்திரங்களை ஏற்றுமதி செய்ய முயன்றதாக ஒரு பெண் மற்றும் இரு ஆண்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. ஆண்களில் ஒருவர் லெபனான் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் மற்றையவர் ஈராக்கியர், ஆனால் பிரித்தானிய பிரஜை என்றும் தெரிய வருகிறது. கைதான பெண் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

இவ் விவகாரமானது சர்வதேச ரீதியில் பரபரப்பை ஏற்படுத்தி இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். 1968 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட அணுவாயுத தடை ஒப்பந்தத்தில் ஈராக்கும் கையெழுத்திட்டது. இதனை மீறும் விடயமாக இது அமைகிறது என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

அத்துடன் பிரித்தானியாவிற்கும் ஈராக்கிற்கும் இடையே ராஜரீக நல்லுறவுகள் மீண்டும் குலைந்து வருவதாக காணப்படுகிறது. முன்பு பிரித்தானிய பிரஜையான பத்திரிகையாளருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதும் அதனைத் தொடர்ந்து இந் நடவடிக்கையும் அதனை மேலும் சீர் குலைப்பதாக உள்ளது. அத்துடன் ஈராக்கிற்கு எதிராக பிரித்தானியா கூறியது அவதூறு பரப்புரை என்று ஈராக் அரசு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் உடன்பாட்டிற்கு ஒத்து ஈராக் நடக்க வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார். அத்துடன் கடந்த 18 மாதங்களாக ஈராக்கின் அணுவாயுத நடவடிக்கை குறித்து புலன் விசாரணை நடத்தி வருகிறது.

## மே. ஜேர்மனியில் குடியமர விரும்பும் ஜேர்மன் இனத்தவர் மீது கட்டுப்பாடு

(பொன்)

மேற்கு ஜேர்மனியில் குடியமர விரும்பும் கிழக்கு ஐரோப்பாவின் ஜேர்மன் இனத்தவர்கள் மீது, மேற்கு ஜேர்மனிய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்திறக்கிறது.

புதிதா ககுடியேறுவோர் மேற்கு ஜேர்மனிய மக்களிடம் இருந்து வேகைலலுஅம் வீடுகளும் பெறுவதாக வரும் குற்றச் சாட்டுகளை அடுத்து இவ் விடயத்தில் இவ் விதிகளை விதித்திருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இந்த ஆண்டு சோவியத் யூனியன், போலந்து மற்றும் ரூமேனியாவில் இருந்து, ஏறக்குறைய ஒரு லட்சம் மக்கள் மேற்கு ஜேர்மனியில் குடியமர்ந்தனர்.

கிழக்கு ஐரோப்பாவில்மாறி வரும் சூழலை கருத்திற் கெண்டே இந்த புதிய கட்டுப்பாடுகள்விதிக்கப்பட்ட தாக மேற்கு ஜெர்மனியின் உள்துறை அமைச்சர் தெரிவித்தாச,

## தக்கர் கமிஷன் அறிக்கை பாராளுமன்றில்சமர்ப்பிக்கப்படும்

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப் பட்டதை விசாரிக்க தக்கர் கமி

## பல்கலைக்கழக விரிவுரையாளர் அமோக வெற்றி!

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்குமிடையிலான 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 150 ஓட்டங்களால் பெருவெற்றியீட்டினர்.

நேற்றுக்காலை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆரம்பத்கிலிருந்து இறுதிவரை வேகமாக ஓட்டங்களைப் பெற்றவண்ணமிருந்தனர். 20 ஓவர்களின் முடிவில் அவர்கள்ஒரு விக்கெட்டைமட்டுமிழந்து 193 ஓட்டங்களைப் பெற்றனர். அணித்தலைவர் முரளிதரன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களையும், பாலேந்திரா ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும் பெற்றனர். வீழ்ந்த ஒரு விக்கட்டை அற்புதராஜா அவர்கள் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி ஆசிரியர்கள் 11.1 ஓவரில் 43 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தனர். 9.5 ஓவரில் இவர்கள் 4 விக்கட்டை மட்டும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். 11 ஆவது ஓவரை வீசிய வீசிய ஏனையோரில் முரளிதரன் ,அருள்வேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ராஜேஸ்வரன். ஞானகுமாரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## ஆசிரியர் பொறுப்புணர்வுடன் செயற்பட முன் வர வேண்டும்

(கிளிநொச்சி)

இந்த நாட்டை ஆட்சி செலுத்தப் போகின்ற எதிர்கால விற்பன்னர்களை உருவாக்கின்ற ஒரு புனிதஸ்தலமாக பாடசாலைகள் மட்டுமே உள்ளது. அப்பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் மிகவும் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும். அவ்வாறு பொறுப்புணர்வோடு செயல் பட்டவர்கள்தான் மனிதருள் மாணிக்கமாகச் போற்றப்படுகிறார்கள்.

கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற திரு. பொன்சபாபதிக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அளித்த பாராட்டு வைபவத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்டபிரதிக் கல்விப் பணிப்பாளர் நொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் அக்குராயன் குளம் கொத்தனி அதிபர் திரு.கி. சின்னராசா தலைமையில் நடைபெற்றது.

திரு.எஸ். வேலாயுதம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இம் மாவட்டத்தில் ஒரு சாதாரண ஆசிரியராக தனது கடமையைத் தொடங்கிய திரு. சபாபதி தனது கடின உழைப்பால் அதிபராகி, சொத்தனி அதிபராகி, இன்று கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சுமார் பதினைந்து மாவட்டங்களில் ஆசிரியத் தொழிலைச் செய்த இவர், தனது திறமையினால் அம்மாவட்டங்களிலுள்ள மாணவர்களினதும், பெற்றோர்களினதும்

## உரிமை கோரப்படாத வங்கிப் பணம்

நீர்ப்பாசனத் திணைக்கள தலைமைய லுவலகத்தில் அண்மைக்கால ஆய்வுகளின் போது அங்கு கடமையாற்றி ஓய்வு பெற்ற அல்லது இறந்த பல வடக்கு, கிழக்கு அரச ஊழியர்களுக்கும் அல்லது இறந்த அரச ஊழியர்களின் பின்னுரித்தாளர்களுக்கும் உரித்துடையதான கோரப்படாத பல ஒய்வூதிய வைப்புப் பணங்கள் வைப்புக் கணக்கில் இருப்பதாக அறியப்படுகிறது. இவ்வகையான வைப்புப் பணங்கள் எக்காரணத்திற்காக கோரப்படாமலிருக்கின்றன என்பதை அறிய முனைந்தபோது பின்வரும் தகவல்கள் வெளியாகின.

ஊழியர்கள் இளைப்பாறும் போது தமது இறுதியான நிரந்தர முகவரியை மேற்படி வைப்புக்கணக்குப் பகுதிக்கு தெரிவிக்காமலும், தமது வைப்புப் பணத்தைக் கோராமலும் விட்டிருக்கலாம்.

ஊழியர்கள் சேவையிலிருக்கும்போது இறந்துவிட்டால், அவ்வூழியர்களின் பணக் கொடைக் கொடுப்பனவுகளின் ஒருபகுதி அவ்வூழியர்களின் பராயமடையாத பிள்ளைகளின் பேரில் வைப்பிலிடப்படுகின்றமையால், அவர்கள் 21 வயதை அடைந்த பின்பு அவற்றை மீளப் பெறக்கூடியதாக இருந்தும், அவர்கள் வைப்புப் பணத்தை கோராமல் இருப்பதுடன் அவர்களது தற்போதைய நிரந்தர விலாசத்தை அறிய முடியாமல் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அண்மைக்கால வன்செயல்களினால் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கலாம்.

ஆகவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மேற்படி திணைக்களத்தைச் சார்ந்த ஓய்வு பெற்ற ஊழியர்கள் அல்லது இறந்த ஊழியர்களின் உறவினர்கள் இவற்றினைக் கவனத்தில் எடுத்து இதுவரை தமக்கு உரித்தான ஏதாவது வைப்புப் பணங்களை பெறவில்லையாயின் தமது பூரண தகவல்களை பிரதிப் பணிப்பாளர் (நிதி) நீர்ப்பாசனத் திணைக்களம், த. பெ. இல. 1138, கொழும்பு - 7. என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

## எரிந்த நிலையில் ஆணின் சடலம்

(அட்டாளைச்சேனை)

மின்னேரியாக் காட்டுப் பகுதியில் கொழும்பு மட்டக்களப்பு பாதையோரத்தில் இனம் காணாதஆண்ஒருவரின் சடலம் எரிந்த நிலையில் காணப்பட்டது. (46)

## அமரர்வணசிங்கா நினைவு அஞ்சலி கூட்டம்

(மட்டக்களப்பு)

காலஞ்சென்ற சிரேஷ்ட தொழிறசங்கவாதி திரு. டி. எஸ். கே. வணசிங்காவின் ஓராண்டு நினைவு அஞ்சலி பொதுக்கூட்டம் நாளை முதலாம் திகதி மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மாவட்ட தொழிற்சம்மேளனம் இணைந்து மேற்படி பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

இராம கிருஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தாஜீ, ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மௌலவி எம். எச், எம். புஹாரி, பிரதி கல்விப் பணிப்பாளர் கு. சோமசுந்தரம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதிதலைவர்

யவர் ஈராக்கியர், ஆனால் பிரித்தானிய பிரஜை என்றும் தெரிய வருகிறது. கைதான

மீண்டும் சூலைந்து வருவதாக காணப்படுகிறது. முன்பு பிரித்தானிய பிரஜையான

குறித்து புலன் விசாரணை நடத்தி வருகிறது.

# மே. ஜேர்மனியில் குடியமர விரும்பும் ஜேர்மன் இனத்தவர் மீது கட்டுப்பாடு

(பொன்)

மேற்கு ஜேர்மனியில் குடியமர விரும்பும் கிழக்கு ஐரோப்பாவின் ஜேர்மன் இனத்தவர்கள் மீது, மேற்கு ஜேர்மனிய அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்திறக்கிறது.

புதிதா ககுடி யே று வோர் மேற்கு ஜேர்மனிய மக்களிடம் இருந்து வேலைகளும் வீடுகளும் பெறுவதாக வரும் குற்றச் சாட்டுகளை அடுத்து இவ் விடயத்தில் இவ் விதிகளை விதித்திருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இந்த ஆண்டு சோவியத் யூனியன், போலந்து மற்றும் ரூமேனியாவில் இருந்து, ஏறக்குறைய ஒரு லட்சம் மக்கள் மேற்கு ஜேர்மனியில் குடியமர்ந்தனர்.

கிழக்கு ஐரோப்பாவில்மாறி வரும் சூழலை கருத்திற் கெண்டே இந்த புதிய கட்டுப்பாடுகள்விதிக்கப்பட்டதாக மேற்கு ஜெர்மனியின் உள்துறை அமைச்சர் தெரிவித்தாச,

# தக்கர் கமிஷன் அறிக்கை பாராளுமன்றில்சமர்ப்பிக்கப்படும்

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப் பட்டதை விசாரிக்க தக்கர் கமிஷனின் அறிக்கை பாராளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் என்று விவாதத்திற்கு பதிலளித்த உள்துறை அமைச்சர் மொஸ்தீ மொஹமட் சகீர் கூறினார். சட்டக் கமிஷன் அறிக்கையின் தீர்ப்பின் படி தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பல உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# மோட்டார் அனுமதிப்பத்திரங்கள் தற்போதைக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான மோட்டார் வாகனப்போக்குவரத்து பரிசோதகர்கள் வடக்கே வர தயக்கம் காட்டுவதால் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் யாழ் கச்சேரியில் தற்போதைக்கு வழங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை என மோட்டார் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பரிசோதகர்களுக்கு யாழ். அரசாங்க அதிபர் பல முறைஅறிவித்தல்கள் கொடுத்தும் இவர்கள் மறுப்புத்தெரிவித்துள்ளதாகவும் அவ்வதிகாரிகள் தெரிவித்தனர். (மீலா)

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆரம்பத்கிலிருந்து இறுதிவரை வேகமாக ஓட்டங்களைப் பெற்றவண்ணமிருந்தனர். 20 ஓவர்களின் முடிவில் அவர்கள்ஒரு விக்கெட்டைமட்டுமிழந்து 193 ஓட்டங்களைப் பெற்றனர். அணித்தலைவர் முரளிதரன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களையும், பாலேந்திரா ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும் பெற்றனர். வீழ்ந்த ஒரு விக்கட்டை அற்புதராஜா அவர்கள் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி ஆசிரியர்கள் 11.1 ஓவரில் 43 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தனர். 9.5 ஓவரில் இவர்கள் 4 விக்கட்டை மட்டும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். 11 ஆவது ஓவரை வீசிய பார்த்திபன் அந்த ஓவரில்4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதில் ஒரு கட்றிக்கும் (HAT-TRICK) அடங்கும், பந்து

## ... செயற்பட முன் வர வேண்டும்

(கிளிநொச்சி)

இந்த நாட்டை ஆட்சி செலுத்தப் போகின்ற எதிர்கால விற்பன்னர்களை உருவாக்கின்ற ஒரு புனிதஸ்தலமாக பாடசாலைகள் மட்டுமே உள்ளது. அப்பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் மிகவும் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும். அவ்வாறு பொறுப்புணர்வோடு செயல் பட்டவர்கள்தான் மனிதருள் மாணிக்கமாகச் போற்றப்படுகிறார்கள்.

கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற திரு. பொன்சபாபதிக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அளித்த பாராட்டு வைபவத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்டபிரதிக் கல்விப் பணிப்பாளத் திரு எஸ் வேலாயுதம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இப் பாராட்டு விழா கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் அக்குராயன் குளம் கொத்தனி அதிபர் திரு.கி. சின்னராசா தலைமையில் நடைபெற்றது.

திரு.எஸ். வேலாயுதம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இம் மாவட்டத்தில் ஒரு சாதாரண ஆசிரியராக தனது கடமையைத் தொடங்கிய திரு. சபாபதி தனது கடின உழைப்பால் அதிபராகி, கொத்தனி அதிபராகி, இன்று கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சுமார் பதினைந்து மாவட்டங்களில் ஆசிரியத் தொழிலைச் செய்த இவர், தனது திறமையினால் அம்மாவட்டங்களிலுள்ள மாணவர்களினதும், பெற்றோர்களினதும் உள்ளங்களில் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பெற்றுள்ளார் என்றார். வேறு பலரும் பேசினார்கள்.

காலஞ்சென்ற பிரேஷிடட தொழிறசங்க வாதி திரு. டி. எஸ். கே. வணசிங்காவின் ஓராண்டு நினைவு அஞ்சலி பொதுக்கூட்டம் நாளை முதலாம் திகதி மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மாவட்ட தொழிற்சம்மேளனம் இணைந்து மேற்படி பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

இராம கிருஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தாஜீ, ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மௌலவி எம். எச், எம். புஹாரி, பிரதி கல்விப் பணிப்பாளர் கு. சோமசுந்தரம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதிதலைவர் எஸ். கரிகாலன், சட்டத்தரணி பொன். வேணுதாஸ் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (37)

# இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை அதிக செலவான ஓர் யுத்த ஆய்வு கூடமாகும்

## - மேஜர்ஜெனரல் ரவீந்திரநாத்

(திருக்கோணமலை)

இந்தியப் படைகள் இலங்கையி ஒரு செலவான பாடத்தைப்படித்துள்ளார்கள். இதே வேளை உலகத்திலே வேறெங்கும் பெற முடியாத கொரில்லா யுத்தமுறை அனுபவங்களையும் பெற்ற செட்டியான சிப்பாய்களுடன் இந்திய இராணுவம் நாடு திரும்பியுள்ளது என்று இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் யுத்த முறைகளும் தாம் பல அனுபவங்களையும் பெற்றுள்ளதோடு, இலங்கைஇனப்பிரச்சினையில் மாற்றம் ஏற்படுவதற்கான வழிகளையும் தாம் முன்வைத்துள்ளதாக இந்திய அமைதி காக்கும் படையின் தளபதி ஜெனரல் ஏ. எல் கல்கத் கூறியுள்ளார்.

நான் இலங்கையில் பெற்ற வேறு பல அனுபவங்களை விட ஒரு அந்நிய அரசுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக நான் பெற்ற அனுபவம் முக்கியமானது. இவ்வாறு இலங்கையிலிருந்து கடைசியாக வெளியேறிய இந்தியத் துருப்புகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வரவேற்பு வைபவத்தின் போது ஜெனரல் கல்கத் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

தமிழ்ப் பிரிவினை வாதிகளின் மையமெனக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில் எமது பிரிவில் 20,000 துருப்புகள் நிலைகொண்டிருந்தனர். அவர்கள் போராளிகளுக்கெதிரான தமது தாக்குதலில் அதிகம் தெரிந்து கொண்டார்கள் என்று மேஜர் ஜெனரல் ரவீந்திரநாத் பஹ்பா கருத்து வெளியிட்டுள்ளார்.

எமது ஜவான்கள் யுத்தத்தினால் கெட்டியாகியுள்ளார்கள். அவர்களது மனோதிடம் மிக உயர்வானது. இதை விட வேறென்ன வேண்டும்? அந்நியமான இலங்கைத் தீவிலிருந்து களைப்படைந்து வந்த எமது ஜவான்களில் பலரும், தாமும் விடுமுறையில் செல்லவுள்ளோம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை அதிக செலவான ஒரு யுத்த ஆய்வு கூடமாகும். உத்தியோக பூர்வமான கணிப்பின்படி 1, 155 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 3, 000 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தியப் படைகள் வெளிநாடுகளில் அமைதி காக்சச் சென்ற சமயம் ஏற்பட்ட இழப்புகளை விட இலங்கையில ஏற்பட்ட இழப்பு பாரிய இழப்பாகும்.

வியட்நாமில் அமெரிக்கர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளை விட இலங்கையில் இந்தியாவுக்கு ஏற்பட்ட அழிவு மிக்க குறைவாகும். இந்திய இராணுவம் இந்த இழப்புகளை ஏற்றுக் கொள்ளும். போர் உச்சகட்டத்தை அடைந்த சமயம், நியூ டெல்கியின்75,000 துருப்புக்கள் இலங்கைத் தீவில் நிலைகொண்டிருந்தன. இவ்வாறு ஜெனரல் கல்கத் தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தை மீள அழைத்திருக்காவிட்டால் வியட்நாம் போன்ற ... படுதோல்வியை இந்தியா ... தித்திருக்க வேண்டி ... திருக்கலாம் என்று நியூ டெல்கியில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தமிழீழ போராளிகளின் முக்கியஸ்தர்களான புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த பிறகு ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியப் படைகளை வெளியேறும்படிகேட்டதாகவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய இராணுவம் தமது கடமையைச் சரியாகச் செய்துள்ளார்கள் என்றும், அதை யிட்டுத் தான் பெருமைப்படுவதாகவும் இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போது குறிப்பிட்டார்.

இளைஞர்களான விடுதலைப் புலிகள் சீனத் தயாரிப்பான ரி. 56, ரஷ்ய ஏ. கே. 47 றைபிள்களுடன் அடர்த்தியான காடுகளில் இருந்து கொண்டு கண்ணி வெடித் தாக்குதலில் குறிதவறாது ஒரு முறையில் பலரைச் சாகடித்தது. இந்தியச் சிப்பாய்களைத் திகைக்க வைத்ததாகவும், கொரில்லாக்களின் மிகப் பயங்கரமான ஆயுதமான கண்ணி வெடியை இந்தியப் படையினர் ஒரு போதும் அறிந்திருக்கவில்லை என்றும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவுத்தார்.

ஜெனரல் கல்கத் கருத்துத் தெரிவிக்கையில், இராணுவத்தின் கடமைகள் முடிந்து விட்டனவென்றும், அரசியல் பரிமாணமான பிரச்சினையில் இராணுவ வீரனுக்கு இடமில்லை என்றார்.

# "அம்பாறை மாவட்டம்தான் முஸ்லிம் மாகாணமெனில் வேண்டாம்"

## அமைச்சர் ஹமீத்திடம் கிழக்கு முஸ்லிம்கள் முறையீடு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் தனியாகக் கொண்ட முஸ்லிம் மாகாணசபை வேண்டாம். அப்படி உருவாகினால் முஸ்லிம்களின் ஒற்றுமை சீர் குலைந்து விடும் என மட்டக்களப்பிற்கு வருகை தந்த உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்திடம் காத்தான் குடி சந்திப்பில் முஸ்லிம் பிரமுகர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீ லங்கா அரசு பேச்சுவார்த்தை தொடர்பாக முஸ்லிம்களின் கருத்துக்களை திரட்டுவதற்காக அமைச்சர் ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளிலும் முஸ்லிம்களுடன் சந்திப்பு நடத்தினார்.

வட-கிழக்கு மாகாணத்தில் தனியானதொரு முஸ்லிம் மாகாணம் அமைவதென்றால் திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். இல்லையேல் முஸ்லிம் மாகாணம் வேண்டாம் என பிரமுகர்கள் தெரிவித்தனர்.

மேலும் பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கையில் வட-கிழக்கு இணைந்த மாகாண சபையென்றால் முஸ்லிம்களின் சுதந்திரம், தனித்துவம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் மத கலாச்சார பாரம்பரியம் பேணப்படல் வேண்டும் எனவும் சமூக பிரச்சினைகள் விசாரணைசெய்தல் கூடாது. அதனை பள்ளிவாசல்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரினர்.

மேலும் தமிழ் கிராம சுற்றாடலிலிருந்து 1985கலவரம் காரணமாக இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் மீளக்குடியமர விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம் அளித்துள்ளார்கள். அதற்கு ஊக்குவிப்பும் வழங்குதல் வேண்டும் எனவும்வட-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற முன்பு இனப்பிரச்சனைக்கான தீர்வுகாணப்படல் வேண்டும் எனவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது பகிரங்கப் படுத்தப்பட்டு இருதரப்பும் அதற்கான உத்தரவாதம் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

மேற்படி கருத்துகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்

எந்தவொரு பிரச்சினையென்றாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள்.

சமூக பிரச்சினைகள் தொடர்பாக அவர்களிடம் முறைப்பாடு செய்யப்படுவதால்தான் அவர்கள் விசாரணை செய்கிறார்கள் நீங்கள் முறைப்பாடுசெய்யாவிட்டால் விசாரணை அவர்கள் செய்ய வெண்டிய நிலை ஏற்படாது.

இனப்பிரச்சினைசகு எந்தவொரு தீர்மானமும் முஸ்லிம்களின்ஆலோசனைஇ றி அமுலுக்குவராது இறுதியான தீர்மானம் முஸ்லிம்களுடன் பேசித்தான்எடுக்கப்படும என்றார். (37)

# மட்டக்களப்பில் யாழ். முஸ்லிம் உதைபந்தாட்டப் போட்டிகள்

## மருதமுனையில் வெற்றி காத்தான்குடியில் தோல்வி

(யாழ். விளையாட்டு நிருபர்)

நீண்ட கால இடைவெளியின் பின்பு யாழ்.குடா நாட்டிலிருந்து மட்டு நகருக்கு உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்ற யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் அங்குநடைபெற்ற போட்டிகளில் வெற்றியும் தோல்வியும் அடைந்துள்ளது.

யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் பலம் வாய்ந்த கோஷ்டியாகவிளங்குகின்றது. இக்கோஷ்டியின்கோல்காப்பு வீரர் எம்.எம். முனாஸ் யாழ் மாவட்டத்தில் சிறந்த கோல் காப்பு வீரராக கருதப்படுகிறார். இவரின் சிறப்பான கோல் காப்பால் பல வெற்றிகளை யாழ் முஸ்லிம் வி. கழகத்திற்கு தேடிக் கொடுத்திருக்கிறார்.

மருதமுனை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ் முஸ்லி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் 4-1கோல்களால் வெற்றியீட்டியது.

மருதமுனை மன்சூர் மௌலானா விளையாட்டரங்கில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டிக்கு ஜனாப் மௌலத்துன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

காத்தான்குடி ''சன்றைஸ்'' விளையாட்டுக் கழகத்துக்கும் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் காத்தான் குடி விளையாட்டுக் கழகம் 1-0 கோலால் வெற்றியீட்டியது.

காத்தான்குடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு எஸ். மகேசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (42)

## சுகாதார ஊழியருக்கு பண்டிகை முற்பணம்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்திலும்கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு எதிர்வரும் தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டுபண்டிகை முற்பணம்விரைவில் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பண்டிகை முற்பணம் பெற்று முறையாக திருப்பிச் செலுத்தியவர்களுக்கே இவ்வருடம் முற்பணம் வழங்கப்படுமென யாழ். பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (43)

## கணவனை இழந்த விதவைகளுக்கு கிளிநொச்சியில் நிவாரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின்போது தமது கணவன்மாரை இழந்த விதவைப் பெண்களுக்கு நேற்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை தலா ஐம்பதாயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க செயலகத்தில் வைத்து நேற்று அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரினால் இந்த நிவாரணப் பணம் வழங்கப்பட்டது.

ஐம்பத்தொரு விதவைப் பெண்கள் இந்த நிவாரணத்தை பெற்றுக்கொள்கின்றனர். இருபத்தைந்து லட்சம் ரூபா இதற்காக இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மினிவான் மோதி இருவர் காயம்

மட்டுநகரை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் மினிவான் ஒன்று சைக்கிளில்வந்து கொண்டிருந்த இருவருடன் மோதியது. இச்சம்பவம் 24-ஆம் திகதி பகல் ஒருமணிக்கு வந்தாறுமூலையில் திருமலை பிரதான வீதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் சைக்கிளில் வந்த இருவரும் பலத்த காயத்துடன் அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் சைக்கிளும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கோரகல்லிமடுவைச் சேர்ந்த அருளானந்தம், சாமித்தம்பி ஆகிய இருவருமாவர்.


வட பகுதி கடற்றொழிலாளர்கள் மலிவு விலையில் கீழ்க் கண்ட பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1 1/2 மி. மீ., 2 மி.மீ. நைலோன் கொர்லோண் நூல்வகைகளை சகாயவிலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

B-290


# விமானநிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

பலாலிவிமானநிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு புனர்நிர்மாண திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

இவ்வீடுகள் ஒரு கூரையையும் சுற்றி அடைக்கப்பட்ட மதிலையும் மட்டுமே கொண்டிருக்கும். இவற்றை அறைகளாகவும் வேறு பகுதிகளாகவும் பிரிப்பது அவர்களுடைய முயற்சியினாலேயே செய்ய வேண்டும் என வீடமைப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீடுகள் வசாவிளான் சுதந்திரபுரத்தில் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

# ஐக்கிய நாணய சங்கம் மூலம் பலர்பயன் அடைகின்றனர்

(சுதுமலை)

பொருளாதார ரீதியாக நலிவடைந்த மக்கள் தாம் தனித்து வாழ முடியாமல் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டு இருந்ததை உணர்ந்து ஒருவர் பலருக்காகவும்,பலர் ஒருவருக்காகவும் உதவ வேண்டும் என்ற அடிப்படையிலே கூட்டுறவு ஐக்கிய நாணயச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

1911 ஆம் ஆண்டில் இலங்கையில் உருவான இந்தக் கூட்டுறவு இயக்கம் இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது.

இவ்வாறு நல்லூர் ப. நோ. கூ. சங்கபணியாளர் ஐக்கிய நாணய சிக்கன சேமிப்பு சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நல்லூர் ப.நோ.கூ சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

திரு ஜயக்குமார் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,இந்த சேமிப்பு சங்கத்தில் ஊழியர்கள்மாதா மாதம் சிறு தொகைகளை முதலீடு செய்து வந்ததன் முலம் இன்று பெருந்தொகைப் பணம் வைப்பிலிடப் பட்டிருக்கிறது.

அங்கத்தவர்களிடையே கஸ்ட நிலை ஏற்படுகின்ற போது இந்நிதியிலிருந்து கடன் கொடுக்கப் படுகின்றது. இதனால் அங்கத்தவர்கள் தனித்தும் ஒருமித்தும் இதன்பயனை அடைகிறார்கள் என்றார். இக்கூட்டத்தில் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி திரு. கா.குமாரசாமி,யாழ். மாவட்டசிக்கன சேமிப்பு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் திரு . எஸ் . ஞானப்பிரகாசம், கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வாளர் செல்வி யோ.தில்லைநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.


# கூட்டுறவுச் சங்கங்களில் துருக்கிப் பருப்பு

(கொழும்பு)

சிவப்பு நிறமுடைய மைசூர் பருப்புக்கு பதிலாக இரண்டு வகையான பருப்புக்களை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் நாடுமுழுவதும் விற்கப்படுகிறது.

இந்தியப் பொருட்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையால் மேலதிகமாக இந்தப் பருப்பு துருக்கியிலிருந்து தருவிக்கப்பட்டது. ஆனால் நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் இந்தப் பருப்பின் விற்பனை குறையத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்தே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இந்த மஞ்சள் பருப்பை சந்தைப்படுத்தவுள்ளது. இதன் விலை கிலோ 36ரூபா 75சதமாகும்.



# காசோலை மோசடிகளைத் தவிர்க்கும் முறை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த காசோலை மோசடி சம்பந்தமாக, யாழ் தொழில் ஆணையாளர் சில அறிவுறுத்தல்களைத் தொழிலாளர்களுக்கும், தொழில் வழங்குநர்களுக்கும் விடுத்துள்ளார்.

ஊழியர் சேமலாபநிதி செலுத்தும் தொழில் வழங்குனர்கள், அவற்றை மத்திய வங்கிக்குக் காசோலைகளாக அனுப்பும்போது கோடிட்ட காசோலைகளில் குறிப்பிட்ட 'கணக்காளருக்கு மட்டும்' என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அல்லது நிரந்தர கோடிட்ட காசோலைகள் மூலம் பணம் செலுத்த வேண்டும்.

காசோலை எழுதும்போது காசோலையின் கீழ் காபன் பேப்பர் வைத்து, காசோலையின் மறுபுறத்தில் எழுத்துக்கள் படியும்படி எழுதும் போது, முன்புறத்தில் உள்ள எழுத்துக்களை அழித்தாலும், பின்புற எழுத்துக்கள் அழிக்கப்பட முடியாது போகும். இதனால் இத்தகைய மோசடிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்தியன் மை கொண்டு காசோலை வரையும்போது எழுத்துக்களை மாற்றி அமைக்க முயன்றால் காசோலை சேதமாகிவிடும். இதனால் காசோலை பாவனைக்கு உகந்த தன்மையை இழந்துவிடும்.

இவை தவிர, வங்கி டிராப்டுகள் மூலம் பணம் செலுத்துவது உகந்ததாகும். இத்தகைய காசோலைகளோ அல்லது டிராப்டுகளோ அனுப்பும்போது நிச்சயமாக இவை பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட தொழில் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவிக்கிறார். மேலும் இது சம்பந்தமான மோசடிகள், தொழிற்திணைக்களத்தால் செய்யப்படுகிறது என்பது முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இதைச் சாட்டாக வைத்து, ஊழியர்களின் கட்டுப்பணங்கள் அனுப்பாமல் விடுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார். (லோ)


அன்னை பூபதிக்கு தீவுப் பகுதி மக்கள் சார்பில்

**எமது அஞ்சலிகள்**



ஈசன் றேட் சென்ரர்
வங்களாவடி - வேலணை

நிக்காடோ றேடிங் ஏஜென்சீஸ்
வங்களாவடி - வேலணை.

(R/52)



A. A. T. (Sri Lanka) Stage I

JUNE 1990 EXAMINATION

NEW BATCH COMMENCING
on
4th April, 1990



புத்தாண்டு வாழ்த்துக்கள்
தமிழ் மக்கள்
அனைவருக்கும்
உரித்தாகுக!



எமது புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

யர்களுக்கு எதிர்வரும் தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டுபண்டிகை முற்பணம்விரைவில் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பண்டிகை முற்பணம் பெற்று முறையாக திருப்பிச் செலுத்தியவர்களுக்கே இவ்வருடம் முற்பணம் வழங்கப்படுமென யாழ். பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (43)

வந்தாறு மூலையில் திருமலை பிரதான வீதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் சைக்கிளில் வந்த இருவரும் பலத்த காயத்துடன் அரசாங்க வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் சைக்கிளும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கோர கல்மிமடுவைச் சேர்ந்த அருளானந்தம், சாமித்தம்பி ஆகிய இருவருமாவர்.


# A. A. T. (Sri Lanka) Stage I

## JUNE 1990 EXAMINATION

NEW BATCH COMMENCING
on
4th April, 1990

Basic Accounting
Economics and Commerce and
Statistics
G. C. E. (O/Level) உடன்
G. C. E. A/Level இல்

கணக்கியல், பொருளியல், வணிகமும் நிதியியலும் சித்தியடைந்தவர்க்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு

**North Ceylon Technical Institute**

14, ST. PETERS LANE, HOSPITAL ROAD,
JAFFNA.

B/481



2 மி.மீ. நைலோன்
கொர்லோண் நூல்வகைகளை சகாயவிலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

B-290



புத்தாண்டு வாழ்த்துக்கள்
தமிழ் மக்கள்
அனைவருக்கும்
உரித்தாகுக!

★
★

அழகிய சாய்ப்புச் சாமான்களை மலிவு விலையில் நீங்கள் பெற்றிட

**சுந்தரம் அன் சன்,**

இல. 9, K, K. S. வீதி,
சுன்னாகம்.

(B. 483)



## கூட்டுறவுச் சங்கங்களில் துருக்கிப் பருப்பு

(கொழும்பு)

சிவப்பு நிறமுடைய மைசூர் பருப்புக்கு பதிலாக இரண்டு வகையான பருப்புக்களை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் நாடுமுழுவதும் விற்கப்படுகிறது.

இந்தியப் பொருட்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையால் மேலதிகமாக இந்தப் பருப்பு துருக்கியிலிருந்து தருவிக்கப்பட்டது. ஆனால் நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் இந்தப் பருப்பின் விற்பனை குறையத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்தே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இந்த மஞ்சள் பருப்பை சந்தைப்படுத்தவுள்ளது. இதன் விலை கிலோ 36ரூபா 75சதமாகும்.

அன்னை பூமிக்காய்
இன்னுயிரைத் தானளித்த
அன்னை பூபதிக்கு
அஞ்சலிகள் ஆயிரமாம்!

தீவக மக்கள் சார்பாக (B-494)
காரைநகர் வடக்கு பிரதேசசபை உபஅலுவலக ஊழியர்கள்





ஈசன் றேட் சென்ரர்
வங்களாவடி - வேலணை

**நிக்காடோ றேடிங் ஏஜென்சீஸ்**
வங்களாவடி - வேலணை.

(R/52)



எமது புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

பெயின்ற் வகைகள்: டியுக்கோ,
டியுலக்ஸ்,
பென்ரலக்ஸ்
மற்றும் கிருமிநாசினி வகைகளையும்
நிதான விலையில் பெற்றிட

**லக்ஷ்மி நாராயணன்**

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(B/482)



புத்தாண்டே மலர்க!

# MANGAI SILKS

Dealers in: TEXTILES

தஞ்சூர், மணிப்புரி, காஞ்சிபுரம்
பட்டுவேட்டிகள், சால்வைகள், கூறைச்சேலைகள்
சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
வெளிநாட்டு சாறி வகைகள், பிளவுஸ் பீஸ்கள்
ஸ்கேட், பிளவுஸ், பஞ்சாபி
மற்றும் புடைவைத் தேவைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**மங்கை சில்க்ஸ்** 8, மத்திய சந்தை,
சுன்னாகம்.

(B/478)



புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

# GANESHANS

பட்டுவேட்டி, சால்வை, கூறைச்
சேலை, றெடிமேட் ஜீன்ஸ்,
சேட் முதலியனவற்றிற்கு

**கணேசன்ஸ்,**

9, நவீன சந்தை,
சுன்னாகம்.

போன்: 224 (B. 479)



எமது புதுவருட வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

உயர்ந்த ரகம்! நிதான விலை

**ஜெயகௌரி ஜெயறாம்ஸ்**
**றெக்ஸ்ரைல்ஸ்**

நவநாகரீக புடைவைகளுக்கும்
மற்றும்
கூறை வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

**ஜெயகௌரி ஜெயறாம்ஸ்**
**றெக்ஸ்ரைல்ஸ்**

5, மத்திய சந்தை, யாழ்ப்பாணம்.

(B/480)

**சிந்தனைக்கு**

அநுபவம் சிறந்த பள்ளி. ஆனால் பள்ளிக் கட்டணம் அதிகம்தான்.

— ஹெனரீஷ் ஹைனெ

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 31 · 03 · 90

## மக்கள் பலத்தை மறந்து...

"சூடுகண்ட பூனை
அடுப்படியை நாடாது"
என்பது தமிழிலுள்ள முதுமொழி.

இலங்கைக்கு அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவத்துக்குத் தளபதியாக இருந்த ஜெனரல் கல்கத் தமது படையின் கடைசி அணியுடன் இந்தியா திரும்பியதும் "இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்திய இராணுவம் இனிமேலும் தலையிடமாட்டாது" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பது மேற்கூறிய முதுமொழியை நினைவுபடுத்துகிறது.

மற்றொரு உண்மையையும் ஜெனரல் கல்கத் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

இந்திய மத்திய புலனாய்வுத் துறையின் பிரிவான 'றோ' என்றழைக்கப்படும் பகுப்பாய்வுப் பிரிவு இந்திய அரசையும் இந்திய இராணுவத்தையும் தனது தவறான தகவல்கள் மூலம் தவறாக வழி காட்டியிருக்கிறதென்பதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எழுநூறு ஆயுதங்களும் இரண்டாயிரம் போராளிகளுமே இருக்கிறார்கள் என்று றோ தகவல் கொடுத்திருந்தது.

இத் தகவலை வைத்துக் கொண்டு தான் எழுபத்திரெண்டு மணி நேரத்தில் புலிகளை அழித்து வழிக்குக் கொண்டு வருவோம் என்று அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சூளுரைத்தார்.

எழுநூறு ஆயுதங்கள்தான் புலிகளிடமிருக்கிறது என்று றோ தகவல் தெரிவித்த பின்னர் இத்தொகையை விட மும்மடங்கான இரண்டாயிரம் ஆயுதங்களை இந்தியப் படை கைப்பற்றியிருந்த போதிலும் புலிகளிடம் ஆயுதங்களுக்குக் குறைவிருக்கவில்லை என்றும் ஜெனரல் கல்கத் தெரிவித்திருக்கிறார்.

றோ மட்டுமல்ல இலங்கை புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிலரும் இப்படித்தான் புலிகளின் ஆயுதங்களையும் ஆட்பலத்தையும் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்திய - புலிகள் போர்: ஒரு கண்ணோட்டம் - 6

# உலக வல்லரசுகள் படித்தபாடத்தை

# இந்திய வல்லரசும் புலிகளிடம் படித்தது!

இலங்கை அரசுக்கும் எமக்கும் மத்தியில் நடைபெற்றபேச்சுக்களின் பயனாக சிங்கள ஆயுதப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் ஒரு போர்நிறுத்தம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் இராணுவ ராஜதந்திர அழுத்தம் காரணமாக இந்தியா தனது படைகளை இவ்வருட இறுதிக்குள் திருப்பி அழைக்க இணங்கியது. அதே வேளை இந்திய அரசு நிபந்தனையற்ற முறையில் விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தத்தையும் அறிவித்திருக்கிறது. இந்திய இராணுவம் இலங்கைக்கு அளித்த வாக்குறுதியின் படி இவ்வருட முடிவுக்குள் முற்றாக தமிழீழத்திலிருந்து வெளியேறிவிடுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தனது பொம்மை அரசான பெருமாளின் நிர்வாகத்திற்கு அரசியல் அதிகாரங்களை பெற்றுக்கொடுத்து, பெருமாளின் தொண்டர் படைக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்து, இந்திய அரசு படைகளை முற்றாக திருப்பி அழைக்கலாமென டில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன இந்திய அரசு தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு தமிழீழ மண்ணை தொடர்ந்து ஆக்கிரமித்தால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் மீண்டும் போர்...

இந்திய அரசுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை இந்திய அரசு நழுவவிடாது என்றே பலர் கருதுகிறார்கள்.


இந்திய அரசு இணக்கம் தெரிவித்தபடி, போர நிறுத்தத்தைப் பேணி, மார்கழி 31ஆந் திகதிக்குள் தனது படைகளை முற்றாகத் திரும்ப அழைத்துக் கொள்ளுமானால் அத்திகதியுடன் இந்திய-புலிகள் போர் உத்தியோகபூர்வமான முறையில் முடிவு எய்தும். அத்துடன் எமது விடுதலை பாதையில் மிகவும் ஆபத்தான, மிகவும் நெருக்கடியான ஒரு கட்டம் முடிவுக்கு வரும்.

சுயநிர்ணய அடிப்படையிலான எமது சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தலையீடு ஒரு தவிர்க்க முடியாத கட்டமாக அமைந்தது. என்றோ ஒரு நாள் இந்தத் தலையீடு நிகழத்தான் செய்யும். இந்த தலையீடு ஏற்பட்டு, ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்தி அது எமது இராணுவசாதனையால்முறியடிக்கப்பட்டு,முற்றாக நீங்குமாயின் அது எமது போராட்டப் பாதையில் ஒரு புதிய திருப்பு முனையாக அமையும். எமது சுதந்திரப் போராட்டத்தை அழிக்க வந்த ஒரு அசரசக்தி, விழுப்புண்களுடன் பின்வாங்குகிறது. இது பின்வாங்கிச் சென்றால் மீண்டும் திரும்பி வர முயற்சிக்காது...

எதிர்ப்புபோரானது, எமது சுய நிர்ணயப் போராட்ட வரலாற்றில் நாம் நிச்சயம் சந்தித்தாக வேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வு. இந்த தலையீட்டை நாம் எதிர்த்து நின்று முறியடிக்கத் தவறியிருந்தால் எமது சுநிர்ணயப் போராட்டம் முடிவு கண்டிருக்கும் நீண்டகாலமாய் எமது இயக்கமும் எமது மக்களும் புரிந்த தியாகங்கள் அனைத்தும் அர்த்தமற்ற தாய் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டிருக்கும். இந்திய இராணுவத் தலையீட்டை எதிர்த்து நின்று போராடி, புலிகள் இயக்கமும் மக்களும் சிந்திய இரத்தமே தமிழீழ சுதந்திர தீபத்தை அணையவிடாது பாதுகாத்தது.

இந்தியாவின் இராணுவத் தலையீடு முடிவுக்கு வந்ததும், தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னேற்றம் கண்ட ஒரு புதிய வரலாற்றுக் கட்டத்தை ஆரம்பிக்கும். இந்தப் புதிய கட்டம் அந்நிய தலையீட்டு நிர்ப்பந்தங்கள் எதுவுமின்றி இன முரண்பாட்டுப் போராட்டமாக மீண்டும் முனைப்புறும். சிங்கள ஆளும் வர்க்கமானது எமது மக்களின் நியாயமான உரிமைகளைத் தொடர்ந்தும் மறுத்தால் உலக நாடுகள் எமது சுயநிர்ணய போராட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கும் சூழ்நிலை பிறக்கும். இந்தப் புதிய வரலாற்று சூழலில் பரந்துபட்ட இந்திய வெகுஜனங்களின் ஆதரவையும் எமது இயக்கம் வேண்டி நிற்கும்.

சர்வதேசமும் இன்று புரட்சிகரமான ஒரு மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது. அமெரிக்க - சோவியத் வல்லரசுகள் மத்தியில் நல்லுறவு வளர்ந்து வருவதால் உலக மகா போர் நெருக்கடி தணிந்து வருகிறது. அணுவாயுதக் குறைப்பு, அந்நிய நாடுகளின் தலையீட்டை நிறுத்தல்...



யோடு கண்காணித்து வந்தது. இந்த சூழ்நிலையில் தான் இந்திய - புலிகள் போர் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. இந்திய ஏகாதிபத்தியத்தின் இராணுவத் திமிரை ஒரு சிறிய விடுதலை இயக்கம் படிப்படியாக உடைத்து வந்ததை உலக நாடுகள் மிகவும் வியப்புடன் கண்காணித்து வந்தன. உலக வல்லரசுகள் படித்துக் கொண்ட கசப்பான வரலாற்றுப் பாடத்தை இந்திய வல்லரசு புலிகளிடம் படித்துக் கொண்டிருக்கிறது என்பதை உலகம் புரிந்து கொண்டது. இந்தியாவின்

தம், படை விலகல், பேச்சு வார்த்தை என்று முரண்பட்டு நின்ற பகைமை நாடுகள் மத்தியில் புதிய உறவுகளும், சமரசமும் உருவாகி வருகின்றன. பிராந்திய வல்லரசுகளும் அந்நிய தலையீட்டை நிறுத்தி, இராணுவ அணுகுமுறைகளைக் கைவிட்டு வருகின்றன. இப்படியாக சர்வதேச உலகில் மாற்றங்கள் நிகழ்ந்து வரும் சூழலில், இந்திய அரசு தனது இராணுவத்தைப் பலப்படுத்தி, தனது ஆயுதபலத்தை நவீனமயப்படுத்தி, தனது அயல் நாடுகளில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, பலவீனமான சிறிய நாடுகளைப் பயமுறுத்தி, தென்னாசியாவின் இராணுவ பூதமாகவும், அரசியல் சர்வாதிகாரியாகவும் தன்னை வளர்த்து வருவதை சர்வதேச உலகம் கவலையுடன் கண்காணித்து வருகின்றது...

அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வந்த தென்னாசிய நாடுகளுக்கும், ஒடுக்கப்பட்டு வரும் உலக நாடுகளுக்கும் புலிகளின் வீரப்போர் தன்னம்பிக்கையைக் கொடுக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது எனலாம். இந்தப் போரில் இந்திய அரசு பெற்றுக் கொண்ட அனுபவம், அதன் வெளிநாட்டு உறவுகளிலும், பூகோள, அரசியல் நிலைப்பாடுகளிலும் புதிய பார்வையையும், புதிய அணுகுமுறையையும் ஏற்படுத்துமென நம்புகிறோம். (முற்றும்)

**சுயநிர்ணய அடிப்படையிலான எமது சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தலையீடு ஒரு தவிர்க்க முடியாத கட்டமாக அமைந்தது என்றோ ஒரு நாள் இந்தத் தலையீடு நிகழத்தான் செய்யும்.....இந்திய தலையீட்டால் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராக உயர் வடிவம் பெற்ற போதும், எமது விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பியதாகவோ அன்றி திரிவு படுத்துவதாகவோ கருதுவது தவறு.**

**இந்திய ஏகாதிபத்தியத்தின் இராணுவத்தினை ஒரு சிறிய விடுதலை இயக்கம் படிப்படியாக உடைத்து வந்ததை உலக நாடுகள் மிக வியப்புடன் கண்காணித்து வந்தன. உலக வல்லரசுகள் படித்துக் கொண்ட கசப்பான வரலாற்றுப் பாடத்தை இந்திய வல்லரசும் புலிகளிடம் படித்துக் கொண்டிருக்கிறதென்பதை உலகம் புரிந்து கொண்டது.**

இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரியத்தால் வெளியிடப்பட்டது.

## சாவகச்சேரி நகரசபை கவனிக்குமா?

ஆசிரியர்

சேதக்கிற்குள்ளாகி குன்றும்...

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எழுநூறு ஆயுதங்களும் இரண்டாயிரம் போராளிகளுமே இருக்கிறார்கள் என்று றோ தகவல் கொடுத்திருந்தது.

இத் தகவலை வைத்துக் கொண்டு தான் எழுபத்திரெண்டு மணி நேரத்தில் புலிகளை அழித்து வழிக்குக் கொண்டு வருவோம் என்று அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சூளுரைத்தார்.

எழுநூறு ஆயுதங்கள்தான் புலிகளிடமிருக்கிறது என்று றோ தகவல் தெரிவித்த பின்னர் இத்தொகையை விட மும்மடங்கான இரண்டாயிரம் ஆயுதங்களை இந்தியப் படை கைப்பற்றியிருந்த போதிலும் புலிகளிடம் ஆயுதங்களுக்குக் குறைவிருக்கவில்லை என்றும் ஜெனரல் கல்கத் தெரிவித்திருக்கிறார்.

றோ மட்டுமல்ல இலங்கை புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிலரும் இப்படித்தான் புலிகளின் ஆயுதங்களையும் ஆட்பலத்தையும் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு இஸ்ரேலிய மொஸாட்டும் பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ். கூலிப்படையும் புலிகளைச் சரியாக மதிப்பிடாமல் இலங்கை அரசுடன் சேர்ந்து போரில் இறங்கின.

இந்தியப்படை றோவின் தவறான மதிப்பீட்டை மட்டுமல்ல ஆயுதங்கள் கொடுத்து தமது பாதுகாப்பில் கூட்டி வந்த கைக்கூலிகளின் வார்த்தைகளையும் நம்பி விடுதலைப் புலிகளைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டது.

ஆனாலும் ஒரு வருடத்துக்கு முன்பு இந்தியப் படைத் தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் சுந்தர்ஜி பதவியிலிருந்து நீங்கியதும் "இலங்கையின் விடுதலைப்புலிகளின் ஆயுதபலத்தையும் ஆட்பலத்தையும் தான் நாம் கணிப்பிட்டோமேயொழிய அவர்களின் மனோபலத்தைக் கணிப்பிடத் தவறி விட்டோம்" என்று தெரிவித்திருந்தார்.

இதற்குகூடச் செவிமடுப்பதற்கு ராஜீவின் வரட்டுக் கௌரவம் விடவில்லை.

புலிகளிடமிருந்த ஆயுதங்களைவிட இந்திய படையிடம் பல மடங்கு அதிகமான ஆயுதங்களிருந்தன; ஆட்பலமும் பல மடங்கு இருந்தது.

புலிகளிடம் ஆயுதப்பலம் ஆட்பலம்; மனோபலம் எல்லாவற்றையும்விட மக்கள் பலமே முக்கியமாகவும் பெரிதாகவும் இருந்ததென்பதை இந்தியாவும் இலங்கையும் உணரத் தவறியதுதான் அவற்றின் தோல்விக்குக் காரணம். மக்கள் பலம்தான் புலிகள் வெற்றிக்கு முக்கிய காரணம்.

வியட்நாமில் அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவும் படித்த பாடத்தை நினைத்துப் பார்க்காமல் இப்போது இந்தியா தமிழீழத்தில் பாடம் படித்திருக்கிறது.

பஞ்சாப்பிலும் ஜம்மு காஷ்மீரிலும் இந்தப் பாடத்தை சிந்தித்து நடந்து கொள்ளாமல் மக்கள் சக்தியை தூசாக மதித்து தொடர்ந்தும் ஆயுத பலத்திலேயே இந்தியா நம்பிக்கை வைத்து நடந்து கொண்டால் இந்தியா துண்டாடப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று சொல்லவதில் தவறில்லை!

---

முடிவுக்குள் முற்றாக தமிழீழத்திலிருந்து வெளியேறி விடுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தனது பொம்மை அரசான பெருமாளின் நிர்வாகத்திற்கு அரசியல் அதிகாரங்களை பெற்றுக்கொடுத்து, பெருமாளின் தொண்டர் படைக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்து, இந்திய அரசு படைகளை முற்றாக திருப்பி அழைக்கலாமென டில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன இந்திய அரசு தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு தமிழீழ மண்ணை தொடர்ந்து ஆக்கிரமித்தால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் மீண்டும் போர் வெடிக்கும் என்பது திண்ணம். போர்த்திறனும் மனோவுறுதியும் கொண்ட புலிப்படை வீரர்களுடன் நீண்ட கால கெரில்லா யுத்தத்தில் இறங்கி தமிழீழத்தில் ஒரு வியட்னாம் அனுபவத்தை சந்திக்க இந்திய அரசு விரும்பவில்லை என சிலர் கருதுகிறார்கள். இப்பொழுது கௌரவமாக வெளியேறிவிட

சுயநிர்ணய அடிப்படையிலான எமது சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தலையீடு ஒரு தவிர்க்க முடியாத கட்டமாக அமைந்தது. என்றோ ஒரு நாள் இந்தத் தலையீடு நிகழத்தான் செய்யும். இந்த தலையீடு ஏற்பட்டு, ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்தி அது எமது இராணுவசாதனையால்முறியடிக்கப்பட்டு,முற்றாக நீங்குமாயின் அது எமது போராட்டப் பாதையில் ஒரு புதிய திருப்பு முனையாக அமையும். எமது சுதந்திரப் போராட்டத்தை அழிக்க வந்த ஒரு அசுரசக்தி, விழுப்புண்களுடன் பின்வாங்குகிறது. இது பின்வாங்கிச் சென்றால் மீண்டும் திரும்பி வர முயற்சிக்காது.

இந்திய தலையீட்டால் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராக உயர் வடிவம் பெற்ற போதும், எமது விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பியதாகவோ அன்று திரிபுபடுத்தியதாகவோ கருதுவது தவறு. இந்தியத் தலையீட்டால் எழுந்த ஏகாதிபத்திய

கமானது எது பக்கலின் நியாயமான உரிமைகளைத் தொடர்ந்தும் மறுத்தால் உலக நாடுகள் எமது சுயநிர்ணய போராட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கும் சூழ்நிலை பிறக்கும். இந்தப் புதிய வரலாற்று சூழலில் பரந்துபட்ட இந்திய வெகுஜனங்களின் ஆதரவையும் எமது இயக்கம் வேண்டி நிற்கும்.

சர்வதேசமும் இன்று புரட்சிகரமான ஒரு மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது. அமெரிக்க - சோவியத் வல்லரசுகள் மத்தியில் நல்லுறவு வளர்ந்து வருவதால் உலக மகா போர் நெருக்கடி தணிந்து வருகிறது. அணுவாயுதக் குறைப்பு, அந்நிய நாடுகளின் தலையீட்டை நிறுத்தல், ஏகாதிபத்திய வல்லாண்மைப் போட்டியை நிறுத்துதல். இது போன்ற முக்கிய விஷயங்களில் வல்லரசுகள் மத்தியில் இணக்கமும், உடன்பாடும் ஏற்பட்டு வருகிறது. போர் நெருக்கடியைத் தளர்த்துவதில் வல்லரசுகள் முன்னின்று செயற்படுவதால், உலக நாடுகளின் உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. போர் நிறுத்

நிய தலையீட்டை நிறுத்தி, இராணுவ அணுகுமுறைகளைக் கைவிட்டு வருகின்றன. இப்படியாக சர்வதேச உலகில் மாற்றங்கள் நிகழ்ந்து வரும் சூழலில், இந்திய அரசு தனது இராணுவத்தைப் பலப்படுத்தி, தனது ஆயுதபலத்தை நவீனமயப்படுத்தி, தனது அயல் நாடுகளில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, பல வீனமான சிறிய நாடுகளைப் பயமுறுத்தி, தென்னாசியாவின் இராணுவ பூதமாகவும், அரசியல் சர்வாதிகாரியாகவும் தன்னை வளர்த்து வருவதை சர்வதேச உலகம் கவலை

அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வந்த தென்னாசிய நாடுகளுக்கும், ஒடுக்கப்பட்டு வரும் உலக நாடுகளுக்கும் புலிகளின வீரப்போர் தன்னம்பிக்கையைக் கொடுக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது எனலாம். இந்தப் போரில் இந்திய அரசு பெற்றுக் கொண்ட அனுபவம், அதன் வெளிநாட்டு உறவுகளிலும், பூகோள, அரசியல் நிலைப்பாடுகளிலும் புதிய பார்வையையும், புதிய அணுகுமுறையையும் ஏற்படுத்துமென நம்புகிறோம். (முற்றும்)

இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரியத்தால் வெளியிடப்பட்டது.

---

## மக்கள் மடல்

## சாவகச்சேரி நகரசபை கவனிக்குமா?

ஆசிரியர்
ஈழநாதம்,

சாவகச்சேரி கண்டி வீதியில் இந்திய இராணுவம் முகாமிட்டிருந்த சமயம் அவ்வீதியை தமது முகாமின் முன் மறித்தமையால் யாழ்ப்பாணம் கொழும்பு வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் கந்தையாவீதி கச்சாய் வீதி வழியாக போய் வந்தது. இதனால் அவ்வீதிகள் பெரும் சேதத்திற்குள்ளாகி குன்றும் குழியுமாக காணப்பட்டது.

இப்பொழுது இந்திய இராணுவம் விலகிக் கொண்டதன் பின் கண்டிவீதியால் நேரடியாக வாகனங்கள் போய் வருகின்றன. சேதமடைந்த வீதிகளில் கச்சாய் வீதி கால்வாசி திருத்தப்பட்ட நிலையிலும் வேறுசில ஒழுங்கைகள் புனரமைக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. ஆனால் அப்பகுதியில் பிரதான வீதியுடன் இணையும் கந்தையாவீதி மட்டும் திருத்தப்படாத நிலையில் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக இருந்து வருகிறது

இதனால் இப்பகுதியில் அன்றாடம் போய்வரும் மக்கள் தடுக்கிவிழுவதும் பல்லுடைவதும் சகஜமாக நிகழ்ந்து வருகிறது இதனை சாவகச்சேரி நகரசபையின் கவனத்திற்கு பலமுறை கொண்டு வரப்பட்டும் எதுவித கவனமும் எடுக்கப்படாது இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இனியாவது இதனை சாவகச்சேரி நகரசபை கவனத்திலெடுக்குமா?

ப. லோகேந்திரன்
சாவகச்சேரி.

---

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா 1997-இல் கொண்டாடப்படுமா ?

தமிழ் ஈழ மக்களும் தமிழ் ஈழநாடும் 1997-ஆம் ஆண்டைத் தந்தை செல்வா நூற்றாண்டாகக்கொண்டாடுவர். அங்ஙனம் தந்தை செல்வா நூற்றாண்டைக் கொண்டாட வேண்டுவது தமிழ் ஈழ வரலாற்றின் கட்டாய தேவையாகும்.

இலங்கைத் தீவில் வதியும் தமிழ் மக்கள் தமது மொழி, மதம், பண்பாடு இவற்றுடன் தமிழ்த்தாயகத்தையும் தனித்துவத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வராவிடில் சிலாபம், நீர்கொழும்புத் தமிழர்களுக்கு நடந்த கதியே ஏனைய தமிழ் மக்களுக்கும் சம்பவிக்கும் என்று அதற்காகவே ஓர் அரசியல் இயக்கத்தைத்தோற்றுவித்துத் தமிழத் தேசிய இனத்தைக் கிட்டத்தட்ட ஒரு முப்பதாண்டு காலம் வழி நடாத்திய தமிழ்ப் பெரியார் தந்தை சா. வே. யே. செல்வநாயகம்.

போராட்டவடிவத்தில் அன்றைய தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் நிரம்பிய வேறுபாடு இருந்தபொழுதிலும், தந்தை செல்வாவின் குறிக்கோள் குறித்தோ அல்லது அன்னாரது அர்ப்பணிப்புக் குறித்தோ மாறுபட்ட கருத்து இளைய தலைமுறையினருக்கு ஒருபோதும் இருந்ததில்லை எல்லாத்தலைமுறையினராலும் விரும்பப்பட்ட தலைவர் தந்தை செல்வா.

அதுமட்டுமல்ல, தந்தை செல்வாவின் நினைவாக ஆண்டுதோறும் நிகழ்த்தப்பட்டு வந்த தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளைக்கூட இடைநடுவில் கைவிட்டுவிட்ட செயல் பொறுத்துக் கொள்ளக்கூடிய தொன்றல்ல!

மேலும், தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு கூறும் நூல் தந்தை செல்வாவின் அடுத்த ஜனன தினத்துக்கு முன் கண்டிப்பாக வெளியிடப்படுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னதாக அளிக்கப்பட்ட வாக்குறுதிதானும் நிறைவேற்றப்படவில்லை. எதிர் காலத்திலாவது அந்த வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்பதற்கும் உறுதி கிடையாது.

ஏன் கடந்த ஆண்டில் வரதராஜப் பெருமாளின் சமூக விரோதக்கும்பலின் தடையையும் மீறி யாழ். திரைப்பட மாளிகைகள் தந்தை செல்வாவின் நினைவு தினங்களில் நாதஸ்வர இசையைப் பகிரங்கமாகவே ஒலிபரப்பியிருந்தன. தந்தை செல்வாவுக்கு மிகவும் பிடித்தமான இசை நாதஸ்வர ஓசை என்பது தெரிந்ததே. அதுபோன்றே, தந்தை செல்வா பள்ளிமாணவராக பிரார்த்தனை செய்த சுண்டிக்குளி பரி. யோவான் தேவாலயத்திலும், தந்தையின் பிறந்தகமான தெல்லிப்பளை தேவாலயத்திலும் விசேட வழிபாடுகளும் சம்பந்தப்பட்ட தினங்களில் நடைபெறவேசெய்தன.

தந்தை செல்வாவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது. ஆ—ர்.

அரசு

---

# இலங்கை பிரஜைகளாக மே 8க்குள் விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பிரஜைகளுக்கென விண்ணப்பிக்க விரும்பும் இந்திய வம்சாவழி மக்கள் மே மாதம் எட்டாம் திகதிக்கு முன் தங்கள் தங்கள் கிராமசேவைஉத்தியோகஸ்தர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று அவர்கள் மூலமாக விண்ணப்பிக்கும்படி யாழ். மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரி எம். சி. அருந்தவச்செல்வம் தெரிவித்தார்.

(லோ)

---

## நினைவஞ்சலிக் கூட்டம்

(தீவுப்பகுதி)

வேலணையில் அன்னை பூபதிக்கு நினைவஞ்சலிக் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடாத்தப்பட்டது. வேலணை தெற்கு துறையூர் ஐயனர் சனசமூக நிலைய முன்றலில் நடை பெற்ற இக் கூட்டத்திற்கு திரு. கந்தையா சோதிதாசன் தலைமை தாங்கினார்.

ஈழநாதம்

# அமைதிப்படை வரவேற்பை கலைஞர் பகிஷ்கரித்த எதிரொலி

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

(சென்னை)

இலங்கையிலிருந்து நாடு திரும்பிய இந்திய இராணுவத்துக்கு சென்னையில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில், தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி கலந்து கொள்ளாதது குறித்து தமிழக சட்டப் பேரவையில் விவாதிக்க அனுமதி மறுக்கப் பட்டதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

முதலில் சபாநாயகர் தமிழ்க்குடிமகன் அனுமதியளித்து பின்னர் அனுமதி மறுத்துள்ளதால் அதனைக் கண்டித்து. தாம் வெளிநடப்புச் செய்ததாக இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அ. தி. மு. க. உறுப்பினர்களும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் நேற்று சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

## நெடுந்தீவில் பனம் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம்

(பண்டத்தரிப்பு)

நெடுந்தீவில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

நெடுந்தீவில் பனை வளம் வீணாக அழிவதாகவும் அவற்றைப் பயன்படுத்துமாறு நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். அம்பலம் விடுத்த கோரிக்கையையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து நெடுந்தீவில் ஆராய்வதற்கு பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க அலுவலர் விரைவில் நெடுந்தீவு செல்லவுள்ளார்.

நெடுந்தீவில் இது அமைக்கப்பட்டதும் பல இளைஞர் யுவதிகளுக்கு பனம் பொருள் உற்பத்திப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் சுய வேலை வாய்ப்பை பெறவும் வாய்ப்பு இருக்கிறது.

நெடுந்தீவில் இப்போதும் பனம் உற்பத்திப் பொருட்களான ஒடியல், பனம்கட்டி, பாய் என்பன வீடுகளில் தயாரிக்கப்படுகின்றன.

## 5 1/2 லட்சம் பேர் தோற்றும் ஜீ.சி.ஈ. (சாதாரண) பரீட்சை

## கட்டடக்காரர் சங்கம் புனரமைப்பு

நல்லூரில் முன்னர் இயங்கி வந்த கட்டடக்காரர் சங்கத்தினைப் புனரமைக்கத் தீர்மானித்திருப்பதால் அதில் அங்கத்துவம் வகித்த சகலரையும், இன்று காலை 10 மணிக்குக் கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### கைதான....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

இரண்டு தினங்களும் இந்த முந்நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் விடுதலைப் புலிகளின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

முன்னரும் வடபகுதிக் கடற் பிரதேசத்தில் நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதிகளிலுள்ள

## இன்று பொதுக்கூட்டம்

(கோண்டாவில்)

அஹிம்சைபோராட்டத்தின் மூலம் பல நாட்கள் பட்டினி கிடந்து தமிழ் மக்களது விடுதலைக்காய் தன்னுயிரை அர்ப்பணித்த அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பொதுக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்க முன்றலில் இன்று 31 ந் திகதி சனி இரவு ஏழு மணியளவில் கோண்டாவில் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. ரங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளதுடன் ''ஒரு கிளி புலியாகிறது'' என்ற நாடகமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

## இளைஞர்கள் யுவதிகளுக்கு கட்டடத் தொழிற் பயிற்சி

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சு தச்சு, மேசன் வேலைவாய்ப்பில் சுமார் ஐம்பதாயிரம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க முன்வந்துள்ளது

'ஜனசக்தி' திட்டத்தில் உதவி பெறும் குடும்பங்களைச்சேர்ந்த இளைஞர்கள், யுவதிகளை இதற்காகத் தெரிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து வருடங்களில் எழுபதாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் யுவதிகளுக்கு இந்த வேலைவாய்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களில் பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்,



கடந்த புதன்கிழமை ஒட்டு சுட்டானில் நடைபெற்ற நினைவுத்தூபி திறப்புவிழா வைபவத்தில் விடுதலைப் புலிகள் (மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தையா) செயலாளர் யோகரெட்ணம் (யோகி) மகளிர் அமைப்பைச் சேர்ந்த கீதா ஆகியோர்.

### பயிலுனர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இதேபோல் சின்ன ஊறணி மீனவர் சங்கம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அரசடி மகாவித்தியாலய

### பிரதேசப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பிரதேசப் பொறுப்பாளர்களுடனும் கலந்தாலோனை நடத்தினார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்ணம் யோகி, யாழ். மாவட்டப் பொறுப்பாளர்

### ஒதுக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலட்சியமே இதற்கு காரணம் என்று அரசாங்க அதிபர் கூறியதாக வெளிவந்த செய்தியில் சில தவறுகள்இருப்பதாக அரசஅதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். 89 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்குபதிலாக 1990 ஆம் ஆண்டுக்கு

## சிகை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டம்

(விசேட நிருபர்)

''சங்கத்திற்கு கட்டுப்பட்டு தன் மூலம் இ ஐக்கியத்தை வளர்க்கமுடியும் ஊர்காவற்றுறைப் பகுதியில் குடிமைத் தொழில் மறிக்கப்பட்டது போன்று புங்குடுதீவிலும் குடிமைத் தொழில் மறிக்கப் படவேண்டும்.''

28ஆம் திகதி புங்குடுதீவில் நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் கிளைச்சங்க கூட்டத்தில் படி தீர்மானங்கள் எடுக்கப் பட்டன.

தலைமைச் சங்கத் தலைவர் திரு. சு. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற சங்க அங்குரார்ப்பண கூட்டத்தில் கிளைச்சங்க நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தெரிவாகினர்.

தலைவர் திரு. செ. சுரேஷ், உபதலைவர் திரு அன்ரன் தாஸ், செயலாளர் திரு. பஞ்சலிங்கம், உபசெயலாளர் திரு அன்ரன் ராசநாயகம், பொருளாளர் திரு. யோ. நாயகம், உபபொருளாளர் திரு. க. வேலாயுதம், காப்பாளர்கள் திரு சி குணரெட்ணம், திரு. க. செல்வம். (2

### புத்தளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள இந்த அலுவலகங்களிலும் ஆஸ்பத்திரியிலும் சிங்களத்தில் கருமங்கள் நடைபெறுவதால் இப்பகுதிகளில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருவதாக அரசுக்குப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுவந்தன.

இதுதொடர்பாக பொது நிர்வாக அமைச்சு இந்து கலாசார ராஜாங்க அமைச்சுக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளது.

### அதிகார..

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கும் அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

மக்கள் முன்னணியைச் சேர்ந்த கண்ணன், ரவி, ராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## உற்பத்தி பயிற்சி நிலையம்

(பண்டத்தரிப்பு)

நெடுந்தீவில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

நெடுந்தீவில் பனை வளம் வீணாக அழிவதாகவும் அவற்றைப் பயன்படுத்துமாறு நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். அம்பலம் விடுத்த கோரிக்கையையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து நெடுந்தீவில் ஆராய்வதற்கு பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க அலுவலர் விரைவில் நெடுந்தீவு செல்லவுள்ளார்.

நெடுந்தீவில் இது அமைக்கப்பட்டதும் பல இளைஞர் யுவதிகளுக்கு பனம் பொருள் உற்பத்திப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் சுய வேலை வாய்ப்பை பெறவும் வாய்ப்பு இருக்கிறது.

நெடுந்தீவில் இப்போதும் பனம் உற்பத்திப் பொருட்களான ஒடியல், பனம்கட்டி, பாய் என்பன வீடுகளில் தயாரிக்கப்படுகின்றன.

## 5 1/2 லட்சம் பேர் தோற்றும் ஜீ.சி.ஈ. (சாதாரண) பரீட்சை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நேற்று நாடு முழுவதும் ஆரம்பமானது. மூவாயிரத்து முன்னூறு பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறுகிறது.

பழைய புதிய பாடத்திட்டத்திற்கான பரீட்சைக்கு ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும் பரீட்சைக்கு மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

எஞ்சியவர்கள் பழைய பாடதிட்ட பரீட்சைக்கு தோற்றுகின்றனர் இப்பரீட்சை அடுத்த மாதம் 7ஆம் திகதி முடிவடையும்.

இந்தப் பரீட்சைக்கு வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாதுகாப்பு ஆயுதப் படையினரால் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கடமைசெய்யாமல் சம்பளம்

**-நளின் செனிவிரத்னா**

(திருகோணமலை)

அரசாங்க ஊழியர்கள் தாம் பொது மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளைச் செய்யவேண்டும். வடக்கிலும் கிழக்கிலுமுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாமல் சமீப காலங்களில் தமது சம்பளத்தைப்பெறுகிறார்கள். இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவரத்னா தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஏமாற்றுவதற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை என்றும் மாகாண அரச உத்தியோகத்தரென்றாலும், மத்திய அரசாங்க உத்தியோகத்தரென்றாலும் அவர்கள் மக்களுக்கு முழுமையாகச் சேவை செய்யவேண்டும் என்றார்.

## அக்கரைப்பற்று டிப்போவுக்கு இரண்டு புதிய பஸ்கள்

(அட்டாளைச் சேனை)

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் அக்கரைப்பற்று டிப்போவுக்கு இரண்டு புதிய பஸ் வண்டிகள் விரைவில் கிடைக்கவுள்ளன.

இந்த டிப்போவில் உள்ள பஸ்கள் பழுதடைந்திருப்பதாக ஈழநாதம் செ[illegible]வெளியிட்டிருந்ததும் கு[illegible]பிடத்தக்கது.

எதிர்வரும் புதுவருடதினத்துக்கு முன்னராக இந்த இரு பஸ்களும் வந்து சேரும் என சாலை முகாமையாளர் திரு. பீ. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

---

...வித்திருப்பதால் அதில் அங்கத்துவம் வகித்த சகலரையும், இன்று காலை 10 மணிக்குக் கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### கைதான....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

இரண்டு தினங்களும் இந்த முந்நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் விடுதலைப் புலிகளின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

முன்னரும் வடபகுதிக் கடற் பிரதேசத்தில் நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதிகளிலுள்ள மீன்பிடி வலைகளை அறுத்துச் சென்றதையும் அப்போதும் அவர்கள் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டதையும் நினைவூட்டிய விடுதலைப் புலியினர் மனிதாபிமானத்தின் அடிப்படையிலேயே அவர்கள் இப்பொழுது விடுதலை செய்யப்படுகிறார்களென்றும் நினைவூட்டி முந்நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்களையும் படகில் ஏற்றி வழி அனுப்பி வைத்தனர்.

இதேசமயம் இந்த மீனவர்கள் பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி புதுடில்லிமூலம் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸவுடன் இந்த மீனவர்கள் விடுதலைக்காகத் தொடர்பு கொண்டார். ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அமைச்சர் ஏ ஸி எஸ். ஹமீத் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டார். இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலய அதிகாரிகளும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டனர். இப்பிரச்சினை பற்றி தமிழ்நாடு சட்டசபையிலும் நேற்றுப் பிரச்சினை கிளப்பப்பட்டது.

### பத்தாயிரம் ...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கொழும்பில் வைக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட புதிய, தொலைந்த அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் துரிதமாகப் பரிசீலிக்கப்பட்டு, அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் சொன்னார்.



கடந்த புதன்கிழமை ஒட்டு சுட்டானில் நடை பெற்ற நினைவுத்தூபி திறப்புவிழா வைபவத்தில் விடுதலைப் புலிகள் (மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தையா) செயலாளர் யோகரெட்ணம் (யோகி) மகளிர் அமைப்பைச் சேர்ந்த கீதா ஆகியோர்.

### பயிலுனர். .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இதேபோல் சின்ன ஊறணி மீனவர் சங்கம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அரசடி மகாவித்தியாலய மாணவர்களும் மாமாங்க பிள்ளையார் ஆலய முன்றலில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். (37)

### பிரதேசப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பிரதேசப் பொறுப்பாளர்களுடனும் கலந்தாலோனை நடத்தினார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்ணம் யோகி, யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பானு, அரசியற் பொறுப்பாளர் டொமினிக், மகளிர் முன்னணித் தலைவி ஆகியோரும் கலந்துகொண்டதாகத் தெரிய வருகின்றது.

### பிரேமாவின்.,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி- பி. தயாரத்தினா

கடற்றொழில் நீர்வள மூலம்- யோசப் மைக்கல் பெரேரா.

பண்பாட்டு அலுவல்கள், தகவல்- டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார.

தபால் தொலைத்தொடர்புகள்- அலிக் அலுவிகார.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை- நந்தா மத்தியூ

வியாபாரம், வர்த்தகப்- ஏ. ஆர். மன்சூர்.

கைத்தொழில், புடவைக் கைத்தொழில்- யூ பி. விஜயக்கோன்.

சுகாதாரம், மகளிர் விவகாரம்- திருமதி ரேணுகா ஹேரத்

மீளமைப்பு, புனர்வாழ்வு சமூகநலன்- ஏ. எஸ். அதிகாரி.

வீடமைப்பு நிர்மாணம்- பீ சிறிசேனா குரே.

பெருந்தோட்டத் தொழில் துறை- ரஞ்சன் விஜேரட்னா.

மின்சக்தி எரிபொருள்- கே, டி எம். பி. பண்டார.

வெளிநாட்டு அலுவல்கள்- ஹரோல்ட் ஹேரத்.

உணவு கூட்டுறவு- வீரசிங்க மல்லிமாராச்சி.

துறைமுகங்கள், கப்பற்றுறை- ரூபா கருணாதிலக.

கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி- ஆர். எம் தர்மதாஸ பண்டா.

தொழில், வாழ்கைப்புள்ளி பயிற்சி- ஜீ. எம். பிரேமச்சந்திரா.

### பாஸ்கர.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் - ஏ. ஆர். எம் ஜெயவர்த்தனா, கல்வி உயர் கல்வி - எம். பீ. பீரிஸ், கலாசார தகவல் - கேணல் குடாலிகம, சுற்றாடல், பாராளுமன்ற விவகாரம் என். எம் பெர்னாண்டோ, சுகாதாரம் மகளிர்விவகாரம் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ, தொழில் வாழ்க்கை, தொழில் பயிற்சி- ஏ.ஏ.யஸ்ரின் டயஸ், நீதி - எஸ். வை. ஹேரத் வீடமைப்பு நிர்மாணம் - டபிள்யூ டீ. ஜலப்பெரும, சுற்றுலா கிராமியத்தொழில் அபிவிருத்தி லக்ஸ்மன் டீமெல், கைத்தறி புடவைத்தொழில்- ஏ. கே. ஹபுதெனிய, தபால் தந்தி தொடர்பு-அசோகா குணசேகரா, புணர்நிர்மான புனர்வாழ்வுசமூகநலன்-சரித்தரத்வத்தை, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை' கே. ஏ. குணசேகரா ஆகியோர்

### ராஜாங்க அமைச்சர்கள்

நேற்று பதவியேற்ற புதிய அமைச்சர்களில் முன்னைய ராஜாங்க அமைச்சர்கள் ஆறு பேரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்

திருவாளர்கள் சந்திரா பண்டார, ஹால் ஹேரத், வீரசிங்க மல்லிமாராய்ச்சி, ரூபா கருணாதிலகா, தர்மதாஸ பண்டா. ஜீ. எம். பிரேமச்சந்திரா ஆகியோரே புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட முன்னைய ராஜாங்க அமைச்சர்களாவர்

வர்த்தகம், சுற்றாடல், கைத்தறி, தொழில் பயிற்சி ஆகிய புதிய துறைகளுக்கும் அமைச்சர்கள் நியமனத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### ஒதுக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலட்சியமே இதற்கு காரணம் என்று அரசாங்க அதிபர் கூறியதாக வெளிவந்த செய்தியில் சில தவறுகள் இருப்பதாக அரச அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். 89 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்குபதிலாக 1990 ஆம் ஆண்டுக்கு பயன்படுத்திவிட்டு பின்னர் 89 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை 90 ஆம் ஆண்டுக்குச் செலவிட ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் இதில் எம்.பி. களின் அலட்சியமான போக்கு என்று தாம் சொல்லுவதற்கு இடம் இக்கவில்லை என்றும் அரசாங்க அதிபர் கூறுகிறார்.

---

...லும் சிங்களத்தில் சரு... நடைபெறுவதல் இப்... ளில் வாழும் தமிழ் மு... மக்கள் பெரி... பாதிக்கப்பட்டுவ... வதாக அரசுக்குப் பல பு... கள் தெரிவிக்கப்பட்டுவந்த...

இது தொடர்பாக பொ... நிர்வாக அமைச்சு இ... கலாசார ராஜாங்க அ... சுக்கு கடிதமூலம் தெ... துள்ளது.

### அதிகார. .

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கும் அனுமதிக்க முடிய... என்றும் கூறினார்.

மக்கள் முன்னணியை சேர்ந்த கண்ணன், ரவி, ராஜ... ஆகியோரும் கலந்து கொ... டனர்.


### அன்னை பூபதி ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்... பற்ற விரும்புபவர்கள், ... நொச்சி கலை கலாசார... பகுதியினருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

## மரண அறிவித்தல்



### முருகேசு வைரமுத்து

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து J. P. முன்னைநாட் சி. சி. எஸ். காலமாகிவிட்டார். இவர் திருமதி. பூமகாலட்சுமியின் அன்புக் கணவரும் திருவாளர்கள் சிவகுமார், வரதகுமார் நிருத்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 31-03-90 ஆம் திகதி சனிக்கிழமை மாலை3மணியளவில் தகனக்கிரியைக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

"குமரபுரம்"
லேட்டன் வீதி,
மானிப்பாய்.

தகவல்
மனைவி, மக்கள்

(B 475)